# விவேகவாணி

அக்டோபர் 2011 – கர புரட்டாசி–ஐப்பசி கலி 5112 ரூ.7/–



# விவேகவாணி

**விவேகானந்த கேந்திர மாத இதழ்**
**விவேகானந்தபுரம்,**
**கன்னியாகுமரி - 629 702**

# வணக்கம்! வாருங்கள்!!


**வெளியீட்டு அலுவலகம்**

**விவேகானந்த கேந்திரம், 5 - சிங்கராச்சாரி தெரு,**
**திருவல்லிக்கேணி, சென்னை - 600 005**


அன்புள்ள வாசக நேயர்களுக்கு, நமஸ்காரம்.

**விவேகவாணியின் அக்டோபர் - 2011** இதழ் **நவராத்ரியைக்** குறிக்கும் வண்ணம் பராசக்தியின் திருவுருவப் படத்தையும், மாதம் ஒரு மந்திரமாக **பராசக்தி** துதியையும் ஏந்தி வருகிறது.

**விவேகவாணியின்** இவ்விதழில் **ஸ்ரீமதி சுவாமி பிரணவ சைத்தன்யபுரி** அவர்களின் மாண்டூக்கிய உபநிஷத விளக்கவுரை நிறைவு பெறுகிறது. சுவாமிகள் மிகவும் அற்புதமான முறையில் ஓம்காரம் பற்றியும், அதனைத் தியானம் செய்வது பற்றியும் விளக்கம் கொடுத்துள்ளார்கள். சுவாமிகளின் ஆசியுடன் இத்தொடர் ஹிந்தியில் இருந்து தமிழாக்கப்பட்டு **விவேகவாணியில்** வந்து நிறைவு பெறுவது நம்முடைய பாக்கியமே.

**சகோதரி நிவேதிதை** கல்வி, சமுதாயம், அரசியல் ஆகிய துறைகளில் ஆற்றிய நற்பணிகளை பேராசிரியை **ஆர். நாகம் சுப்பிரமணியம்** அவர்கள் எழுதி உதவி உள்ளார்கள். சகோதரி நிவேதிதைக்கு அவருடைய நினைவு திதி நூற்றாண்டு விழாவில் **(13.10.2011)** அஞ்சலி செலுத்துகிறோம். சென்ற இதழ் **விவேகவாணியின்** காகிதத்தின் தரமும் உயர்த்தப்பட்டுள்ளதை வரவேற்று வாசகர்கள் மகிழ்ந்துள்ளனர். வாசகர்கள் வாழ்வில் அனைத்து நலன்களும் பெருகவும், பாரதத்திற்குரிய சிறப்புத் திருவிழாவான பராசக்தி வழிபாட்டால் வாசகர்கள் அனைத்து நலனும் பெறவும் பிராத்திக்கிறோம்.

**இப்படிக்கு,**
**இறைவன் பணியில்,**
**விவேகவாணி**

**அக்டோபர் - 2011**


**தொலைபேசி: (044) - 28440042/28442843**
**ஈமெயில்: vkpt@vkendra.org**

**தவம் 27** **அக்டோபர் - 2011** **சேவை - 6**

**தனிப்பிரதி ரூ. 7/-, ஆண்டுச்சந்தா ரூ. 75/-, இரண்டாண்டுச் சந்தா ரூ. 140/-, மூன்றாண்டுச் சந்தா ரூ. 200/-, ஆயுட்சந்தா (10 ஆண்டுகள்) ரூ. 700/-, வெளிநாட்டு ஆண்டுச் சந்தா 20 டாலர்கள்.**

# மாதம் ஒரு மந்திரம்

**அக்டோபர் 2011 விவேகவாணி** இதழ் **நவராத்ரியைக்** குறிக்கும் வண்ணம் கலையழகு மிகுந்த **பராசக்தியின்** திருவுருவப்படம் ஒன்றை அட்டையில் தாங்கி வருகிறது. தாய்வழிபாட்டின் பெருமையை அனைவரும் உணர்வோமாக!

யாதேவீ ஸர்வபூதேஷு சேதனேத்யபிதீயதே /
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம://

எந்த தெய்வீக அன்னை உயிர்களனைத்திலும் உயிருணர்வு வடிவில் இருக்கின்றாளோ அவளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்.


யாதேவீ ஸர்வபூதேஷு சக்தி ரூபேண ஸம்ஸ்த்திதா/
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோநம://

எந்த தெய்வீக அன்னை அனைத்து உயிர்களிலும் சக்தி வடிவத்தில் உறைகிறாளோ அந்த அன்னைக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்.

**– தேவீ பாகவதம்**

உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம்,
உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது
மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்கும
தோயம் என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன்
விழுத்துணையே.

**– அபிராமி அந்தாதி**




## வேதத்தின் உட்பொருள்

# பிரணவம் எனும் ஓம்காரம் [248]

## ஓம்காரம்

**மாண்டுக்கிய உபநிஷதத்தின் அடிப்படையில் சுவாமி பிரணவ சைதன்யபுரி ஹிந்தியில் எழுதி வாராணசி பரமார்த்த சாதக சங்கம் வெளியிட்டது**

### அத்தியாயம் – (2) ஓம்காரத்தின் மறைபொருள் – ஓம்காரமே அனைத்தும்



வாசகம் (சொல்லோசை) வாக்கியம் (அதனால் காட்டப்படும் பொருள்) இரண்டுக்கும் மூலம் ஒரே தத்துவமே. வாசகம் என்ற நோக்கில் அதனை ஓம்காரம் என்கிறார்கள். கூறப்படுவது என்ற நோக்கில் பார்த்தால் அதுவே பிரம்மம் சங்கராச்சாரியார் மாண்டுக்ய பாஷ்யத்தில் கூறுகிறார். **அபிதானாபிதேயயோ: ஏகரூபத்வே அபி அபிதான ப்ராதான்யேன நிர்தேச: க்ருத: ஓமித்யேதத் அக்ஷரம் இதம் ஸர்வம் இத்யாதி! அபிதானப்ராதான்யேன நிர்திஷ்டஸ்ய புன: அபிதேய ப்ராதான்யேன நிர்தேச: அபிதானாபிதேயயோ:| ஏகத்வப்ரதிப்ரத்யர்த்த: ......ததாஹ ஸர்வம் ஹ்யேதத் ப்ரம்மேதி"**

அபிதானம் (கூறுவது) அபிதேயம் (கூறப்படுவது) இரண்டும் ஒரே வடிவினவை ஆயினும் கூறுவதன் முக்கியத்துவத்தினால் ஓம்கார் என்ற எழுத்தே இவையாவும் என்று கூறப்பட்டது. கூறுவதற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கூறப்பட்ட அதே பொருள் மறுபக்கம் கூறப்படுவதற்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசுவது, (கூறுவது) கூறப்படுவது இரண்டும் ஒன்றே என்று உணர்த்துவதற்காகவே இதனால் இவையாவும் பிரம்மம் என்று கூறப்பட்டுள்ளது. அதன் உட்பொருள்

யாதெனில் ஒன்றேயான பிரம்மமே, கூறுவதும் கூறப்படுவதும் ஆகும். வாசகமும் வாக்கியமும் ஆகும். இரண்டும் ஆகும். வாசகம் என்ற நோக்கில் அதுவே ஓம்காரம். சப்தப்ரம்மம். முழுமையான நாம ரூபப்படைப்பின் மூல ஓசை வடிவம் ஓம்காரமே.

ஓம் இத்யேதத் அக்ஷரம் இதம் ஸர்வம்

சப்தப்ப்ரம்மமானது தன்னுடைய இவ்வாறெனக் கூறப்பட்ட இயலாத இயல்பினால், தன்னிடம் இருந்து வேறுபடாத சக்தியின் மூலம், ஓசைப் படைப்பு, பொருள்படைப்பு என்ற வடிவில் விளங்குகின்றது. அவ்வாறான விளக்கம், அதாவது படைப்பு என்பது சூக்குமத்தில் இருந்து தூலத்தை நோக்கிச் செல்வதாகும். வேதாந்தத்தில் மூன்று உடல்கள் காரணம், சூக்குமம், தூலம் என்று உண்டு. அதே விதத்தில் ஓசை உலகும் அர்த்த (பொருள்) உலகும் மூன்று விதத்தினவை ஆகும்.

பொருள் என்பது எது? எதனை சொல்லோசையினால் விளக்க முடியுமோ, குறிப்பிட முடியுமோ, எதனை **"அறிய"** முடியுமோ, எதனை அனுபவிக்க முடியுமோ அதுவே பொருள். பொருள் என்பதை விஷயம் என்றும் கூறுவர். இந்தப்பொருள் தூலமாகவோ சூக்குமமாகவோ, வெளித்தோன்றா நிலையிலோ அவ்யக்தமாகவோ இருக்கக் கூடும்.

இக்காரணத்தால் மாண்டூக்யத்தில் ஆத்மாவினை விழிப்பு நிலையில் தூலத்தை நுகர்வது என்றும் கனவு நிலையில் சூக்கும வாசனைகளை நுகர்வது என்றும் (ப்ரவிவிக்த புக்) கனவற்ற உறக்கமாம் சுஷுப்தியில் "தோன்றா நிலையிலான ஆனந்தத்தை" நுகர்வது என்றும் கூறப்பட்டுள்ளது. மூன்று விதப் பொருளுக்கு இணங்கவே சொல்லும் பொருளும் கூட, தூலம், சூக்குமம், காரண வடிவம் என்ற மூவிதத்தினவையாகின்றன.

தூல அர்த்தம் வெளியே இருக்கும் பானை, துணி ஆகிய பொருள்கள். அவற்றை விழிப்பு அவத்தையில் புலன்களின் மூலம் அறிகின்றோம் நுகர்கின்றோம். இந்த நிலைப் பாட்டின் சொல் **வைக்கரீ** என்பதாகும். அதனை உச்சரிக்க முடியும் (காதினால்) கேட்க முடியும். இந்த நிலையில் (வளர் நிலையில் ஓசை) பொருள் – நம்பிக்கை இவற்றில் வேறுபாடு நன்கு தெளிவாக இருக்கின்றது.



சூக்குமப் பொருள் புறப்புலன்கட்கு எட்டாது. அது

மனத்தின் விருத்தி (போக்கு) வடிவினதாகும். நாம் ஏதாவது தூலப் பொருளை நோக்கும் போது, அந்தப் பொருளுக்கு ஏற்ப ஒரு வடிவம் நம்மனத்தில் உருவாகின்றது. மனத்தின் விஷய வ டி வி லா ன அவ்விளைவினை **விருத்தி** என்கிறோம். ஒரு பொருளை குவிந்த கவனத்துடன் கண்ட பின் கண்களை மூடிக் கொண்டால் அப்பொருளின் வடிவம் கொஞ்ச நேரம் தெரிகிறது. அது விருத்தியின் அனுபவமே! கண்ணாடியில்



தெரிவது போல் மனக்கண்ணாடியில் புறப்பொருள் பிரதிபலித்துக் கொண்டே இருக்கின்றது. அந்த மனமயமான உள் உலகமே சூக்குமப் பொருள்! இதற்கு இணங்கவே சூக்குமச் சொல்லோசை திகழ்கிறது. அது விருத்தி வடிவினதாவதாலேயே உச்சரிக்க முடியாததாகவும் காதினால் கேட்க முடியாததாகவும் இருக்கிறது.

**விருத்தி** என்பதை தன்னையே விஷயமாக, கருது பொருளாகக் கொண்டது என்று ஏற்கப்பட்டுள்ளது. விருத்தியானது விஷயங்களுடன் இணைத்தே (கருது பொருளை உடன் கொண்டே) தன்னைப் புரிந்து கொள்கிறது. பானை வடிவினதான விருத்தி, பானை என்ற உணர்வை உண்டாக்குவதில் வெற்றி பெறுகிறது. கூடவே, தன்னைப் பற்றி அறிவையும் (ஒருவரிடத்தில்) உண்டாக்குகிறது. அப்போதுதான் பானையைப் பற்றிய அறிவு, பானையோடு கூடவே, பானையைப் பார்ப்பவரையும் தொடர்புடையவராக ஆக்குகிறது. அதாவது, பானையறிவுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள, அதற்குமாறான வேறு இன்னொரு ஞானத்திற்குத் தேவை இல்லை. மேலும் பானையைப் பற்றிய அறிவுக்கு எவ்வாறு பானை விஷயமோ (கருது பொருளோ) அதே போல, ‘தானும்’. இதே கருத்தில் வேதாந்தத்தில் செயலைக் காணும் ஆச்சாரியர்கள், விருத்தியையும் தானே கருதும் பொருளாக ஏற்றனர். விருத்தியின் “பிடிக்க முடிந்த” பகுதியை அர்த்தம்/பொருள் என்கிறோம். அதைப் “பிடிப்பவரே” சப்தம் என்றும் (ஏற்கப்பட்ட நம்பிக்கை என்றும்) கூறுகிறோம். விருத்தி தானே சப்தம், பொருள், நம்பிக்கை ஆகும்.

தூல அடிப்படையில் புறத்தே இருக்கும் பானை விஷயம், கருது பொருள், அர்த்தம் ஆகும். பானை வடிவிலான விருத்தி நம்பிக்கை ஆகும். ப்+ஆ+ன்+ஐ+ எழுத்துக்களின் கூட்டாகிய ஓசை இம்மூன்றும் வெவ்வேறானவை.


ஆனால் சூக்கும நிலையில் பானை வடிவிலான விருத்தியே கருது பொருள் (விஷயம்) ஆகும். அதுவே விருத்தி எனும் சொல்லும், நம்பிக்கையும் ஆகும். பிடிக்கப்படுவதால் அது விஷயம் (கருது பொருள்); பிடிப்பதால் அது சப்தமும், நம்பிக்கையும் ஆகும். இந்த அடிப்படையில் சப்தம், பொருள், நம்பிக்கை இவற்றிடையே உள்ள வேறுபாடு தெளிவாகத் தெரிவதில்லை. தனிநபர் (வ்யஷ்டி) கூட்டு (சமஷ்டி) வேறுபாட்டினால் இது சூக்கும சரீரத்துடன் தொடர்புடையதாகிறது. சப்த நோக்கில் இது ‘‘மத்யமா’’ வாக்கு. இங்கு சப்தம் ஞானமயமானது.

காரண (‘‘அர்த்தம்’’)ப் பொருளோ, சக்தி வடிவினது. விதை வடிவினது. அங்கு இப்படைப்புலகம் முழுவதும் ஒன்றாகி விடுகிறது. அனைத்துக் காரியங்களும் ஸம்ஸ்கார வடிவினால் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. இதனை அவ்யாக்ருதம், அவ்யக்தம் ஆகிய சொற்களால் வருணிக்கிறோம். இதன்படி இந்தக் காரண நிலையில் (பூமியில்) சப்தமும் காரண வடிவினது. பிளவுபடாதது. மாண்டூக்கியச் சொற்களில் ‘‘பிரஜ்ஞான கன ஏவ’’ அதாவது அறிபவன் / அறிபொருள் என்ற பிளவு இல்லாத ஒன்றேயான ஞானம் மட்டுமே. வெளித்தோன்ற உயிருணர்வுதான் (சைதன்யம்) தான் இங்கு சப்தம் ஆகும். அனைத்து சப்தங்கட்கும் அர்த்தங்கட்கும் பொது அடிப்படையான இந்த காரண தத்துவத்தைத்தான் ஸத் என்கிறோம். ஈச்வர் என்கிறோம். சப்தபிரம்மம் என்கிறோம்.

சப்தம் என்ற நோக்கில் இதுவே பராவாக்கு ஆகும். இங்கு அனைத்துவிதமான சப்தங்களும் அர்த்தங்களும் உள்ளடங்கிப்போய் சைதன்யம் (உயிர் உணர்வு) மட்டுமே எஞ்சி இருக்கிறது.



சப்தப்ரம்மன் இப்படைப்புலகம் (ஜகத்) முழுவதற்கும் விதை ஆகும். பார்வை உள் நோக்கித் திரும்பும் போது சப்தப்ரம்மமானது தனக்குள் மூழ்கி இருக்கும் ஸம்ஸ்காரமயமான ஜகத் (படைப்புலகம்) முழுவதையும் பார்வை இடுகிறது (நோக்குகிறது) அப்போது, அதையே பச்யந்தீ வாக்கு என்கிறோம். பரா மற்றும் பச்யந்தி, இவை காரண சப்தத்தின் அதிர்வற்ற கண் திறந்த அவத்தை (நிலை) யின் பெயரே ஆகும். அதற்குப்பிறகு, சூக்கும சப்த, பொருள் இவற்றின் படைப்பு நிகழ்கிறது. அது மத்யமா என்ற அவத்தை (நிலை) ஆகும். சப்தம் என்ற தன் மாத்திரை முதல், சூக்கும சரீரத்தில் உற்பத்தி வரை இந்த



நிலை (அடிப்படை). அதற்குப்பிறகு பஞ்சீகரணம் மூலம் தூலப்பிரபஞ்சம் படைக்கப்படுகிறது. இவ்விதத்தில் சப்தப்ரம்மத்தில் இருந்து படைப்பு முழுவதும் வெளித் தோன்றுகிறது.

இரண்டற்ற உயிர் உணர்வு (சேதனப்) பொருளில் இருந்து சப்த உலகம், பொருள் உலகம் இரண்டும் படைக்கப்படுகின்றன. என்றாலும் கூட ஞானத்தைக் குறிக்கும் சப்தத்தில் இருந்து வெளிவந்த பின்னர் தான் இந்த சப்தத்திற்கான அர்த்தம் (பொருளின்) படைப்பு உண்டாகிறது. முன்னால் கூறினோம். இந்தப் பொருள் படைப்பு (அர்த்தப் பிரபஞ்சம்) முழுவதும் ஞானத்தினின்று அதிகப்படியாகத் தோன்றினாலும் அது உண்மையானதல்ல. அது ஞானம் மட்டுமே! ஞானமே வாசகம் (கூறப்படும் சப்தம்) அதனால் அனைத்துப் பொருள்களும் தம் வாசகத்தில் இருந்து வேறுபட்டவையே அல்ல. ஒன்றேயான பிளவுபடாத சைதன்யமே தன் சொல்லுக்கடங்காத சக்தி மூலம் அளவற்ற ஞான வடிவில் காணப்படுகிறது. அதனால் எல்லா ஜ்ஞானமும் சைதன்யம் எனப்படுகிறது. இவ்விதம் அனைத்து அர்த்தங்களும் (பொருட்களும்) தங்கள் ஞானவடிவிலான சப்தத்தில் இருந்து வேறுபட்டவை அல்ல. எல்லா ஞானமயமான சப்தங்களும் சேதனமயமான சப்தமான ஓம்காரத்தில் இருந்து வேறுபட்டவை அல்ல. ஆகவே ஒன்றேயான ஓம்காரமே இவை அனைத்தும் என்பது நிரூபிக்கப்படுகிறது. சங்கரர் கூறுகிறார்.



யதீதம் அர்த்த ஜாதம் அபிதேய பூதம் தஸ்ய
அபிதானா வ்யதிரேகாத் அபிதானஸ்யச ஓங்காரா
வ்யதிரேகாத் ஓங்கார ஏவ இதம் ஸர்வம்.

– ஹரி ஓம் தத் ஸத் –

(கட்டுரைத் தொடர் நிறைவு)


# ஓம்காரத்யானம்
## (தாரணையில் இருந்து தியானத்திற்கு)

டாக்டர் எச்.ஆர். நாகேந்திரா

**ஸமாதி:** பிரஜ்ஞையின் ஒரு தளத்தில் இருந்து, அடுத்த தளத்திற்கு முன்னேறும் போது தியானத்தில் இருந்து சமாதி நிலையைச் சென்றடைகிறோம். அகமுக அனுபவ உணர்வின்மூலம் இன்னும் இன்னும் ஆழமான நிலைகளை அடைகிறோம். நம்மை நாமே தூய்மைப்படுத்திக் கொள்கிறோம். தவறான வாசனை சம்ஸ்காரங்களை (கர்மவினைப் பதிவுகளை) மீறி மேலெழுகிறோம்.

தாரணையும், தியானமும் சமாதிக்கு உதவும் கருவிகள் என்கிறார் பதஞ்சலி, சமாதி என்பது ஒருங்கிணைவது ஆகும். பார்ப்பவர், பார்க்கப்படுவது, பார்ப்பதாகிய செயல் இம்மூன்றும் ஒன்றுபடுகின்றன. இந்த மூவகை (திரிபுடி) மறைந்தொழிந்து விடுகிறது. நாம் உள்ளுக்குள் தாவிக் குதிக்கிறோம். சமாதியில் இருந்து நாம் திரும்பி வரும்போது அதில் இருந்து விரிவு பாதுகாத்து வைக்கப்படுகிறது. மறுபடியும் தியானம், மறுபடியும் தாரணை உதவுகிறது. இன்னும் இன்னும் ஆழமாக உள்ளே குதிக்கிறோம். சமாதிக்குப்பின் சமாதி இதுவே பதஞ்சலி சொன்ன வழி. பிரஜ்ஞையின் மேலும் மேலும் சூக்குமத் தளங்களைக் கட்டவிழ்ப்பதே வழி. நமக்குள் இருக்கும் தெய்வத் தன்மையை நாம் மேலும் மேலும் வெளிக் கொண்டு வருகிறோம்.

தாரணை என்பது மனத்தைக் குவித்துக் கூர்மையுறச் செய்வது என்று மேலே கண்டோம். தாரணை எனும் கவனசக்தியாகத் தொடங்கிய தியானம் வளர்ந்து நேர்கோட்டு விழிப்புணர்வு, பரப்பளவிலான விழிப்புணர்வு, முப்பரிமாண விழிப்புணர்வு அனைத்தையும் ஊடுருவும் விழிப்புணர்வு என்னும் விரிவாக்க நெறியில் பயணம் செய்கிறோம். இதற்கிணையாக பார்வையின் ஆழமும் அதிகரிக்கின்றது. சாதகர் இதுவரை சாதாரணமாகக் காணப்படாதவற்றைக் காண்கிறார். இறை ரகசிய ஓசையைக் கேட்கிறார். நல்ல தரிசனங்கள் கிட்டுகின்றன.



இதுவரை நகர்ந்திராத நறுமணம் நுகரப்படுகிறது. எச்சில் ஊற்றில் இதுவரை அறிந்திராத, புலன்கட்கு அப்பாற்பட்ட சுவைகள், மலர் போன்ற தொடுஉணர்வு கிட்டுகின்றன. புலன்கள் அனைத்தும் மிகவும் நுணுக்கமான உணர்வு பெறுகின்றன. இயங்கு உறுப்புக்கள் இலேசாகின்றன. வேலை செய்வதற்கு அதிகமுயற்சி தேவைப்படுவதில்லை. பணி சுவாரசியமாகவும், ஆனந்தமயமாகவும் இருக்கும். விரிவான மனது மிகுந்த பலமும் சங்கல்ப (இச்சா) சக்தியும் கொண்டு திகழும். இறுக்கங்களும், அழுத்தங்களும் இன்றி மனத்தெளிவு பிறக்கிறது. இத்தகைய அமைதிமிகு மனத்தில் இருந்து கவிதை ஊற்றெடுக்கிறது என்கிறார் ஸ்ரீஅரவிந்தர். தியானத்தின் பக்கவிளைவாக உயர்ந்த தரமான படைப்பாற்றல் விளைகிறது. அகத்தில் இருக்கும் அஜ்ஞானம் குறைகிறது. பிரஜ்ஞையின் மேல்தளங்களை சாதகர் எட்ட எட்ட, பார்வையில் பிழைதிருத்தம் ஏற்படுகிறது. இத்தகைய மாற்றங்கள் நிகழ நாம் அனுமதிக்க வேண்டும். மறைந்து ஒளிந்து இருக்கும் கர்மவினைப்பதிவுகள் தீர்ந்து தொலையட்டும், தூய்மையுறட்டும். சரியான கர்மவினைப்பதிவுகள் சம்ஸ்காரங்கள் உண்டாகட்டும். நாம் வளர்ந்து கொண்டே இருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்வதே உகந்த வழி.

தொடர்ந்து தியானம் புரிவோம். ஆழம் பெறுவோம். பாரதம் முழுவதும் நம் தொன்மையான ரிஷிகளின் உபதேசங்களைப் பரப்புவோம். உலகம் முழுவதும் பரப்புவோம். அமைதியையும், ஒற்றுமை ஒருங்கிசைவையும், அன்பையும், சமச்சீர் பூரண வாழ்கையையும் நிலைபெறச் செய்வோம். (கட்டுரை நிறைவு)

(விவேகானந்த கேந்திரப் பத்திரிக்கை)

### கேந்திரச் செய்தி

குமரி மாவட்டம் சொத்தவிளை முத்தாரம்மன் கோவிலில் நடந்த சமயவகுப்பு மாநாடு ஊர்வலம், போட்டிகள் நிறைய பரிசுகள் இவற்றால் சிறப்புற்றது. சிவத்தொண்டர் சதாசிவம், ஊர்த்தலைவர் கிருஷ்ணன், கேந்திரத் தொண்டர் வே. அருமைத்தங்கம் ஆகியோர் குழந்தைகளுக்குப் புரியும் வண்ணம் உரையாற்றினார். 22 சமய வகுப்புகள், 31ஆசிரியர்கள், 354 மாணவர்கள் கலந்து கொண்டது விழாவின் பெருமையை எடுத்துக் கூறிற்று. உள்ளூர் அன்பர்கள் ரூபாய் 2,000/- மதிப்புள்ள புத்தகங்களைப் பரிசாக வழங்கியது குறிப்பிடத்தக்கது. விழா ஏற்பாடும், தகவலும் கேந்திரத் தொண்டர் வே. அருமைத்தங்கம்.

# சிறைச்சாலைகள் மூலம் நாட்டை நடத்திச் செல்ல முடியுமா?

அமெரிக்காவின் மக்கள் தொகை உலக மக்கள் தொகையில் ஐந்து சதவிகிதம் மட்டுமே. ஆனால் உலக சிறைக்கைதிகளின் எண்ணிக்கையில் கால்வாசிப்பேர் அமெரிக்காவில்தான் இருக்கின்றனர். சட்டம் போட்டு, குற்றவாளிகளைத் தண்டித்து நாட்டின் பிரச்சினைகளைத் தீர்த்து விட முடியாது.

செல்லாத காசோலை எழுதினால் சிறைத்தண்டனை! போதை மருந்து பயன்படுத்தினால் சிறைத்தண்டனை! உலகின் பலநாடுகளில் இதுபோன்ற குற்றங்கட்குச் சிறைத்தண்டனை கிடையாது (அபராதம்தான்). மற்ற நாடுகளை விட சிறைத்தண்டனை அதிக நாட்கள் நீடிப்பதும் அமெரிக்காவில் தான்! அமெரிக்காவில் 23 லட்சம் குற்றவாளிகள் கம்பி எண்ணுகிறார்கள். சீனாவில் (மக்கள் தொகை 120 கோடி) 16 லட்சம் கைதிகள். 30,000 மக்கள் தொகை கொண்ட ஸான் மரீனோ நாட்டில் ஒரே ஒரு கைதி தான்.

சட்டம் என்பது மனிதனை நல்லவனாக்குமா? சட்டம் என்பது பணிபுரிவது தண்டனை, பரிசு மூலம் தான். மரபு, பண்பாடு, குடும்பம், நாகரிகம், கலாச்சாரம், மதம் ஆகியவையே மனிதனைப் பண்படுத்திப் பாடம் புகட்டுபவை.

வயது வந்தவர்களை மட்டும் கணக்கில் கொண்டு பார்த்தால் நூறு அமெரிக்கர்களில் ஒருத்தர் சிறைத்தண்டனை அனுபவிக்கிறார். உலகின் சராசரி பொதுமக்கள் 600 பேருக்கு ஒரு கைதி என்பது.

அமெரிக்க சிறைத்தண்டனை இவ்வளவு அதிகமாக இருப்பது ஏன்? 1) வன்முறைக் குற்றங்கள் அங்கு அதிகம் 2) சிறைத்தண்டனை விதிக்கும் சட்டங்கள் மிகக் கடுமையானவை அங்கே! 3) இனச்சண்டை வரலாறு 4) போதை மருந்து அருந்துவதை எதிர்க்கும் சிறப்புப் போராட்டம் 5) அமெரிக்கர்களின் குணவிசேஷம், 6) சமுதாயம் என்னும் பாதுகாப்பு வலை இல்லாதது.

அங்கு நீதிபதிகள் கூட மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்கள் கடுமையான தண்டனைகள் வேண்டும் என்று கேட்கும் பொதுமக்களின் வற்புறுத்தலுக்குக் கீழ்ப்படிய வேண்டி உள்ளது. வன்முறையற்ற குற்றங்கட்காகக் கூட, சிறைத்தண்டனை வழங்குவது அமெரிக்காவில்தான்.

கடைசியாக ஒன்று. சிறைச்சாலைகளில் இடம் போதாமல், தனியார் விடுதிகளில் குற்றவாளிகளை அடைத்து வைத்து, விடுதிக்காரர்கட்குப் பணம் தரலாமா? என்று வேறு அரசும் யோசித்து வருகிறதாம்.

பண்பாட்டுக்கு மாற்று ஏற்பாடாக, தண்டனை, பரிசு-தரும் சட்டம், சமுதாயத்துக்கு மாற்று ஏற்பாடாகக் கட்சி அரசியல், ஆசிரியர்கட்கு மாற்று ஏற்பாடாகக் காவல்துறையினர் என்று பண்பாட்டைக் கேவலப்படுத்துபவர்களுக்கு அமெரிக்க உதாரணம் உறைக்குமா?

***இப்பக்கத்திற்கான விளம்பர நிதி உதவி விவேகானந்தா இன்ஸ்டிட்யூட் ஆஃப் லிங்க்விஸ்டிக் ஸ்கில்ஸ் பிரைவேட் (லிட்) சென்னை–600 049***

# நசிகேதமன்றம்

ஸி. முத்துசாமி, விவேகானந்த கேந்திரா, பாளையங்கோட்டை

**1738) சுதந்திரப் போரில் பங்குபெற்ற இந்து ஆன்மீகப் பெரியவர்களைப் பற்றிய விபரம் தரலாமா? இது சம்பந்தமாக ஏதாவது புத்தகங்கள் இருக்கின்றனவா?**

பாரத நாட்டின் சுதந்திரப் போராட்டம், நாம் இழந்த நம் தெய்வீக, தேசீய நற்குணங்களைத் திரும்பப் பெறுவதே என்று உணர்ந்து சுவாமி விவேகானந்தர், லோகமான்ய திலகர், ரமணமகரிஷி, மகாத்மா காந்தி, ரவீந்திரநாத் தாகூர், சுப்ரமண்ய சிவா, வினோபாஜி, சுவாமி சகஜானந்தர், ஸ்ரீ அரவிந்தர் முதல் மதன்லால் தீங்க்ரா, வாஞ்சிநாதர், தீரத்சிங் வரை எல்லா வயதினரும் தம் எழுத்துக்களாலும், செயல்களாலும் தொண்டினாலும், நேரடி அரசியல் போராட்டத்தின் மூலமும் பெரும்பணி ஆற்றியுள்ளனர். சுவாமி விவேகானந்தர், சுவாமி ராமதீர்த்தர் ஆகியோர் சுதந்திரப் போராட்ட வீரர்கட்கு எழுச்சி தந்ததைப் பற்றி நூல்களும், கட்டுரைகளும் வெளியாகி உள்ளன. லாலா லஜ்பத்ராய், மதன்மோகன் மாளவீய, வீர சாவர்க்கர், அன்னிபெசன்ட், சகோதரி நிவேதிதை ஆகியோர், வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய பாரதியார், ராஜாஜி என்று இவ்வரிசை நீண்டு கொண்டே போகிறது. நம் சுதந்திரப் போராட்டத்தின் இயங்கு சக்தியாக ஆன்மீகம் விளங்கியதை ஆயும் “த ரோல் ஆஃப் ஸ்பிரிச்சுவல் லிட்டரேச்சர் இன் இந்தியாஸ், ஃப்ரீடம் மூவ்மென்ட்” என்ற கேந்திரப் பத்திரிக்கை ஆங்கில இதழை கேந்திரம் வெளியிட்டுள்ளது.



மு. வைகுண்டவேல், எட்டுக்கூட்டுத் தேரிவிளை, அகஸ்தீஸ்வரம், குமரி மாவட்டம்

**1739) மகாபாரதப் போர் நடந்த போது பீஷ்மருக்கு வயது 180 என்று ஆன்மீக நூல் ஒன்றில் காணப்படுகிறது. மகாபாரதப் போரில் அவர் துரியோதனனுக்காக போரிலும் ஈடுபட்டுள்ளார். இவ்வளவு வயது வரை பீஷ்மர் வாழ்ந்தார் என்பது நம்பக் கூடியதாக இல்லையே?**

தவவலிமையும், ஒழுக்கச் சிறப்பும் கொண்ட பீஷ்மர் தான் நினைத்த போது மரணம் அடையலாம் என்ற சிறப்புத் தகுதியைப் பெற்றிருந்தார். போரின்போது கண்ணனுக்கும், அர்ஜுனனுக்கும் 120 வயது என்றும் கூறப்படுகிறது. அண்மையில் திருக்கோவலூர் ஸ்ரீமத் ஞானானந்த சுவாமிகள்



160 வயதுக்கும் மேல் வாழ்ந்தார் என்பர். ஸ்ரீராமகிருஷ்ணரின் குரு தோதாபுரி 400 ஆண்டுகட்கும் மேல் வாழ்ந்தார் என்று கூறுவார்கள். மூச்சின் நீளத்தை வைத்தே ஒருவர் எவ்வளவு நாள் வாழ்வார் என்று கணக்கிடப்படுகிறது. பிராணாயாமம் செய்யும் இம்மகான்கள் நீண்டகாலம் வாழ்ந்ததில் வியப்பு ஒன்றும் இல்லை. பொதுவாக யுகந்தோறும் சராசரி வயது குறைந்து கொண்டே போவதாகக் கூறுவர். காற்றும் உணவும் மாசுபட்டு, வேகவேகமாக மூச்சுவிட்டுச் சாகும் இன்றைய மனிதர்களுடன் முந்தையவர்களை ஒப்பிடுவது கூடாது.

ஈ. சீதாராமன், சாம்பவர் வடகரை, நெல்லை மாவட்டம்

**1740) சிலை வழிபாட்டால் மைல்கல்லும் சாமியாகிறது?**

கணிதத்தில் நமக்குத் தெரியாத விஷயத்தைக் குறிக்க ''எக்ஸ்' என்ற எழுத்தைப் பயன்படுத்துவதைப் போல் எந்தப் பொருளையும் இறைச் சின்னமாகப் பயன்படுத்தலாம். இல்லத்தரசி ஒருத்தர் மாடுகட்டும் ஆப்பு (முளைக்குச்சியை) இறைவனாக வழிபட்டு முக்தி அடைந்த தலம் திரு ஆப்பனூர் ஆகும். ஆவுடையார் கோவிலில் அடிப்பீடமாகிய ஆவுடையே இறைவடிவமாகப் பாடப்பட்டது. மாட்டுச்சாணம், களிமண், மஞ்சளரிசி இவற்றால் செய்த பிள்ளையார் வடிவங்களை வழிபடுவார்கள் பக்தர்கள். உள்ளத்தைத் தூய்மையாக்கிக் கொள்ள எந்தப் புறச் சின்னத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம். எதனையும் எள்ளி நகையாடுவது எளிது. அதன் தத்துவத்தைப் புரிந்து கொண்டு தன்னை உயர்த்திக் கொள்வது மிகக் கடினம்.

மதுரை, வெல்க வெல்கவே முகாமினர்

**1741) இந்த முகாமில் ஆண்களும், பெண்களும் கூடி உள்ளோம். சமுதாயத்தில் ஆண்கள் ஆற்ற வேண்டிய கடமைகளும், பெண்கள் ஆற்ற வேண்டிய கடமைகளும் ஒன்றேயா, வெவ்வேறா?**

பொதுவான சில கடமைகளை யாரும் செய்யலாம். ஆனால் குழந்தை வளர்ப்பை பொறுத்தவரை ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியே பொறுப்புக்கள் உள்ளன. உலக சமூகவியல் அறிஞர்கள் கூறுவதாவது. குழந்தை

வளர்ப்பைப் பொறுத்தவரை ஜெண்டர் கன்வர்ஜன்ஸ் இருபாலரும் ஒன்றுபோல் செயல்படுவது தவறு ஆகும். ஒரு குழந்தைக்கு தாயின் அன்பும் வேண்டும். தந்தையின் கண்டிப்பும் வேண்டும். ரவீந்திரநாத் தாகூரும் இயற்கை தன்னைத்தானே காப்பி அடித்துக் கொள்வதில்லை. கடவுளின் படைப்பில் ஒன்றுபோல் இன்னொன்று இருப்பது இல்லை. ஒவ்வொருவருக்கும் தனித்தனிக் கடமைகள் உள்ளன என்றார். ஃபிரிஜாஃப் காப்ரா என்பவர் சமத்துவம் என்பது இயற்கை பேசும் மொழி அல்ல. அது அரசியலின் மொழி. அது இயற்கையின் ஒவ்வொரு அம்சமும் ஒன்றை ஒன்று நிறைவு செய்வதாகவே அமைந்திருக்கும் என்கிறார். இவ்விதம் பல பணிகள் பொது. சில தனித்தனிக் கடமைகள்.

மதுரை, வெல்க வெல்கவே முகாமினர்

**1742) சுவாமிஜி இந்த தேசத்தைப் பற்றிக் கண்ட கனவில் மற்ற மதத்தினருக்கு என்ன பங்கு?**

தேச பக்தியை அடிப்படையாகக் கொண்டு பொதுநலச் சேவை இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடமை ஆகும். ஆகவே சுவாமிஜி கனவு கண்ட தேச பக்தியில் எல்லோருக்கும் பொறுப்பு உண்டு. ஒவ்வொருவருக்கும் ஈடுபாடு வேண்டும்.

மதுரை, வெல்க வெல்கவே முகாமினர்

**1743) தியாகம் என்றால் என்ன?**

தியாகம் என்ற சொல் 'த்யஜ' என்ற வேர்ச் சொல்லில் இருந்து வந்தது. விட்டு விடுதல் என்று பொருள். பிறருடைய நன்மைக்காக நம்முடைய சுகங்களை விட்டு விடுதல். தியாகம் தான் சமுதாய ஒற்றுமை, ஆன்மீக வளர்ச்சி, தேசப் பணி எல்லாவற்றுக்கும் அடிப்படை என்று சொல்லலாம். சுயநல மறுப்பு தான் மனிதன் அமுதத்தன்மையை அடைய, வாழ்வின் இனிமையைப் பெற உதவும் என்று உபநிஷதம் கூறுகின்றது. வாழ்வின் மிகச்சிறிய விஷயங்களில் கூட ஒன்றைத் தியாகம் செய்தால் தான் இன்னொன்றைப் பெற முடியும். தியாகம் தான் இயற்கையில் வளர்ச்சியின் அடிப்படை. வளர்ச்சியின் ஒவ்வொரு மேல்ப்படியை எட்டும் போதும், கீழ்ப்படியை, இதற்கு முன் அடைந்த வெற்றிகளை, விட்டுத்தான் ஆகவேண்டும்.

மதுரை, வெல்க வெல்கவே முகாமினர்

**1744) சமூக விரோதிகளாகச் செயல்படுபவர்களைத் தடுக்க தனி மனிதர் என்ன செய்ய முடியும்?**

மிகுந்த உடல் பலமும், செல்வாக்கும், தைரியமும் இருந்தால் ஒழிய, தனியே, ஒருவர் சமூக விரோதிகளை எதிர்த்து நிற்பது மிகக்கடினம். பயங்கரவாதிகள் செயல்படும் மாவட்டங்களைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளன. பத்து லட்சம் பேர் வசிக்கும் ஒரு மாவட்டத்தை முப்பதே முப்பது பயங்கரவாதிகள் ஆட்டிப் படைக்கிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது. ஆகவே இப்பிரச்சினைகளை எதிர்கொள்வதில் சமுதாயத்தின் கூட்டுச் சக்தி

மிகவும் பயன்படும். கேந்திர நிறுவனர் மா. ஏக்நாத்ஜி வரலாற்றைப் பற்றி அறிந்தவர், எப்படி அன்னியர் படையெடுப்பில் சில போர்வீரர்களும், சில குதிரை வீரர்களும் டெல்லியில் இருந்து கல்கத்தா வரை மிக எளிதில் பெரும் போரின்றி நாட்டைத் தங்கள் கைவசத்தில் எடுத்துக் கொண்டனர் என்பதைக் குறிப்பிட்டுள்ளார். மக்களிடையே ஒற்றுமையும், விழிப்புணர்வும் இல்லாவிட்டால் மிகக் குறைந்த எண்ணிக்கையில் குண்டர்களும், பயங்கரவாதிகளும் சமுதாயத்தை ஆட்டி வைக்கத் துவங்கி விடுவார்கள். ஆகவே சமுதாய ஒற்றுமை மிக அவசியமானது ஆகும்.

மதுரை, வெல்க வெல்கவே முகாமினர்

**1745) தாய்நாடு, தேசபக்தி இவற்றுக்கு என்ன தேவை? இவற்றுக்கு நாம் என்ன செய்ய வேண்டும்?**

இதைப்பற்றி சகோதரி நிவேதிதை கூறும் அழகிய சொற்களை கேளுங்கள். ''சிந்தனை உலகில் ஒவ்வொரு மனிதரும் தாம் பிறந்த நாட்டை தன் வாழ்க்கையின் ஒப்பற்ற சத்தியமாகப் புரிந்து கொள்ள வேண்டும். தாய்நாடு தன் மீது ஏற்படுத்தி உள்ள மாற்றங்களை உணர்ந்து மனப்பூர்வமான தாய்நாட்டை வணங்க வேண்டும். அதன் பெருமையில் மகிழ வேண்டும். அதன் அடிப்படை தத்துவங்களைக் கண்டு உணரவேண்டும். தாய்நாட்டையும், தாய்மண்ணில் பிறந்தவர்களையும் நேசிக்கக் கற்க வேண்டும்.'' இவ்வாறு அவர் கூறுகிறார். ஏனென்றால் நம் வாழ்க்கையில் சுவாசிக்கும் காற்றையும், உண்ணும் உணவையும், காலடி மண்ணையும் தேசமே கொடுக்கிறது. நம் பண்பாடு, நம் உறவினர்கள், நம் பழக்கவழக்கங்கள், நாம் போற்றிப் பாதுகாக்கும் நினைவுகள், அனுபவங்கள், எல்லாமே தாய்மண்ணில் இருந்து நமக்குக் கிடைத்தவை. ஆனால் நீரிலேயே வாழும் மீனுக்கு நீரின் பெருமை தெரிவதில்லை. அதுபோல தாய்நாட்டின் பெருமையை நாம் சில சமயங்களில் புரிந்துகொள்ளத் தவறி விடுகிறோம். இலங்கையில் இருந்து இந்தியாவில் வந்து வாழும் அகதிகள் காஷ்மீரில் இருந்து குடிபெயர்ந்து அந்த மாநிலத்தின் இன்னொரு பகுதியான ஜம்முவில் வந்து வாழும் காஷ்மீர் ஹிந்துக்கள் இவர்களைக் கேளுங்கள். தேசபக்தி என்பது ஒவ்வொரு கணமும் உயிர்த் துடிப்பில் கலந்து இருப்பது தெரிய வரும். யூதர்கள் பல்லாயிரம் ஆண்டுகள் தங்களுக்கு ஒரு தாய்நாடு வேண்டும் என்று போராடி பிறகு அதனைப் பெற்றனர். ஆகவே தாய்நாட்டில் நாம் வசதிகளுடன் இருக்கும் போது தாய்நாட்டின் பெருமை நமக்குத் தெரியாது. தொழிலுக்காகவோ, படிப்புக்காகவோ வெளிநாடு செல்லும் பலர் அங்கு போன பிறகு தான் நம் நாட்டின் சிறப்புக்களை நினைத்து ஏங்குகின்றனர். நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் தொட்டு, தூய்மையும், நேர்மையும் பெற நமக்கு உதவுவது தேச பக்தியே.



மதுரை, வெல்க வெல்கவே முகாமினர்

**1746) உன்னால் உலகிற்கு உதவி செய்ய முடியாது. மாறாக சேவை தான் செய்ய முடியும் என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். உதவிக்கும், சேவைக்கும் என்ன வேறுபாடு?**

பொதுவாக உதவி என்பது கொஞ்சம் மேல்நிலையில் உள்ளவர்கள் கீழே உள்ளவருக்குச் செய்வது. சேவை என்பதோ ஏழை, எளியவர்களை இறைவனாகவே நினைத்து பணிவிடை செய்வது. மனப்பாங்கிலும், அணுகு முறையிலும் மிகுந்த வேறுபாடு உண்டு. ஆகவே எதிரே இருக்கும், துன்புற்று இருக்கும், உதவி தேவைப்படும் மனிதர் இறைவனின் வடிவமே என்ற பணிவுடன் செய்யப்படும் தொண்டு, உதவி பெறுபவரையும் உயர்த்தும், செய்பவரையும் உயர்த்தும். ரவீந்திரநாத் தாகூரின் பாடல் ஒன்று நான்கு வகையான அன்பைக் குறிப்பிடுகின்றது. ஸ்னேகம், பிரேமை, தயை, பக்தி இவற்றால் மனித வாழ்க்கை மென்மையும், இனிமையும் பெறுகிறது என்று அவர் கூறியுள்ளார். ஸ்னேகம் என்பது எந்தவித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் நண்பருக்கு நாம் காட்டும் அன்பு. பிரேமை என்பது பொதுவாக காதலை குறிப்பிடுவது. தயை என்பது உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் கீழான நிலையில் இருப்பவர்களிடம் காட்டும் அன்பு. பக்தி என்பது உயர்ந்த நிலையில் உள்ளவர்களிடம் எளியவர்கள் காட்டும் அன்பு. சுவாமி விவேகானந்தர் பிறருக்குச் சேவை செய்வதன் மூலம் நம்முள் இருக்கும் நற்குணங்களை வெளிக்கொண்டு வர முடியும். இந்த வாய்ப்பை நமக்குத் தருவதற்காகவே எல்லாம் வல்ல இறைவன் முட்டாள் வடிவமும், துன்புறுவோன் வடிவமும், எழுத்தறிவு இல்லாதவன் வடிவமும், நோயுற்றவன் வடிவமும் தாங்கி வந்துள்ளார். அவருக்கு நாம் சேவை செய்யும் போது நம்மை நாமே சரியாகப் புரிந்து கொள்கிறோம். ஆகவே சுவாமி விவேகானந்தர் சேவையை வற்புறுத்தினார்.




மதுரை, வெல்க வெல்கவே முகாமினர்

**1747) விவேகானந்தருக்கு தம் இளம்பிராயத்தில் சத்குருவாக இராமகிருஷ்ணர் என்ற மகான் கிடைத்தார். பரம்பொருளை தரிசித்தார். உலக அரங்கில் 'ஹிந்து' நாட்டைப் பற்றி பேசினார். அதுபோல் எங்களுக்கும் சத்குரு (இறைவனைக் கண்டவர்) கிடைத்தால் பாரத நாட்டை உயர்த்த வழி கிடைக்கும்?**

ஒவ்வொரு தடவையும் நமக்கு இத்தகைய குருமார்கள் நேரில் தான் வரவேண்டும் என்று கட்டாயம் இல்லை. அவர்கள் தந்த உபதேசங்கள் நிறைய கிடைக்கின்றன. அவற்றை நல்லமுறையில் பின்பற்றி வாழ்ந்தால் வாழ்க்கையில் கதவுகள் பல திறக்கும். உயர்வதற்கும் வழி வகுக்கும்.

# இதயத்தைத் திருடும் இனிய கதைகள்

## 1751) நடைமுறை அறிவு



சில இலக்கியவாதிகள் ஓரிடத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். நாம் எல்லோரும் ஆளே இல்லாத தீவில் போய் அகப்பட்டுக் கொண்டால் அங்கு படிக்க கூடிய என்ன புத்தகம் எடுத்துச் செல்வது என்று பேசிக் கொண்டிருந்தார்கள். முதலாவது ஞானச்சாமி சொன்னார். நான் வேதாந்த சமயப் பத்தகத்தை எடுத்துச் செல்வேன். இரண்டாவது கவிஞர் கண்ணுசாமி சொன்னார். நான் ஷேக்ஸ்பியர் புத்தகத்தை எடுத்துச் செல்வேன். மூன்றாவது முனுசாமி சொன்னான். நான் தச்சனார் தங்கசாமி எழுதிய புத்தகம் ஆகிய **காட்டு மரங்களைக் கொண்டு படகு கட்டுவது எப்படி?** என்ற புத்தகத்தை எடுத்துச் செல்வேன். அவன் பிழைப்பின் வழி தெரிந்தவன்.

## 1752) கருமி அம்மாளின் கல்யாணம்

கல்யாணப் பெண் கருமி அம்மாள் யார் யாருக்கு தன் திருமணப் பத்திரிக்கையை அனுப்புவது என்று பட்டியல் போட்டிருந்தாள். அப்பட்டியலை தன் சினேகிதியிடம் அவள் காண்பித்தாள். சினேகிதி கேட்டாள். ‘‘வேடிக்கையாக இருக்கிறது உன் செயல். உன் திருமணத்திற்கு தம்பதிகளை மட்டுமே நீ அழைக்கிறாயே.’’ மணப்பெண் புன்னகையுடன் பதில் சொன்னாள். ஏற்கெனவே திருமணம் ஆனவர்களை என் திருமணத்திற்கு அழைத்தால் அவர்களுக்குத் திரும்ப நான் மொய் எழுதவோ பரிசு கொடுக்கவோ தேவையில்லை அல்லவா. மொத்த வருமானமும் நமக்கு லாபம் தானே?

## 1753) விழி இருந்தும் காணாதவர்கள்



ஒரு பைத்தியக்கார ஹாஸ்பிடல் – மனநோய் மருத்துவமனையின் வாசலில் மனநோயாளி உட்கார்ந்து இருந்தான். ஒரு மீன் பிடிக்கும் தூண்டிலை கையில் வைத்துக் கொண்டு ஒரு வாளி தண்ணீரில் தூண்டிலை மிதக்க விட்டிருந்தான். அங்கிருந்த பார்வையாளன் ஒருவன் இதனை கிண்டல் செய்வதற்காகவும், தன் நண்பர்களைச் சிரிக்க வைப்பதற்காகவும் கேள்வி கேட்டான். நண்பரே இதுவரை எத்தனை மீன்கள் பிடித்திருக்கிறீர்கள். பைத்தியம் பதில் சொல்லிற்று. உன்னைச் சேர்த்து மொத்தம் பத்து மீன்கள்.

## 1754) எத்தனை தடவை பாடுவது?

ஒரு இசைக் கச்சேரியில் பாடகர் படு பயங்கரமாகப் பாடிக் கொண்டிருந்தார். பார்வையாளர்களிடம் இருந்து ஒருவர் குரல் எழுப்பினார். இந்தப் பாட்டை இன்னொரு தடவை பாடுங்கள். பாடகருக்கு மிகவும் மகிழ்ச்சி. ஐயா இப்பாட்டை இன்னொரு தடவை நான் பாடுவேன். நீங்கள் கேட்டதன் காரணம் என்ன? என் பாட்டின் எந்த அம்சம் உங்களுக்குப் பிடித்து இருந்தது? பார்வையாளர் பதில் சொன்னார். நீங்கள் இந்தப் பாடலைச் சரியாகப் பாடும் வரை திரும்பத் திரும்ப உங்களை பாடச் சொல்லி வற்புறுத்திக் கொண்டே இருப்போம்.

**ஜே.பி. வாஸ்வானி கூறியது**

## 1755) சமாதானப் பிரியரும், சண்டைக்காரனின் பசுவும்

சமாதானப் பிரியர் சாந்தி நாதர் ஒரு அழகிய தோட்டத்தை வளர்த்து வந்தார். அவருடைய அண்டை வீட்டுக்காரன் சண்டைச்சாமி ஒரு பசு வளர்த்து வந்தார். சண்டைச் சாமியின் பசு, சாந்திநாதனின் தோட்டத்துப் பயிர்களை மேய்ந்துவிடும். பயிர்களைக் காலால் மிதித்து அழிக்கும். பல தடவை இப்படி நடந்தது. சாந்தி நாதனுக்கு வெறுப்பு ஏறியது. ஒருநாள் அப்பசு மாடு தன் தோட்டத்து பூச்செடிகளை தின்றும், மிதித்தும் அழித்த பிறகு சாந்திநாதர் அப்பசுவை கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டார். சண்டைச்சாமியின்



வீட்டுக்கு ஓட்டிப் போனார். சொன்னார். நண்பரே! உன்னுடைய பசுவை நான் இதுவரை நூறு தடவை என் தோட்டத்தில் இருந்து விரட்டி இருக்கிறேன். இன்னும் ஒரு தடவை உன் பசு மாடு என் தோட்டத்திற்குள் நுழைந்தால் என்ன செய்வேன் தெரியுமா?

சாந்திநாதன் வாக்கியத்தை முடிக்க வில்லை. சண்டைச்சாமி கோபத்துடன் உறுமினான். என்ன செய்து விடுவாய்? என்ன நடக்கும் சொல்லு? என்ன செய்வாய்?

சாந்தி நாதன் மென்மையாகப் பதில் சொன்னார். 101-வது தடவையும் உன் பசு மாட்டை உன் வீட்டில் கொண்டு வந்து விடுவேன். சண்டைச்சாமிக்கு அவமானம் தாங்கவில்லை. அவருடைய பசு அதன் பிறகு சாந்திநாதனின் தோட்டத்திற்குப் போகவே இல்லை.

**ஜே.பி. வாஸ்வானி கூறியது**

## 1756) உயிர் விதை

கிரேக்க நாட்டு ஸோலோன் என்ற ஞானி இருந்தார். அவர் தந்த அறநூல்களை மக்கள் இன்றும் நினைவில் வைத்திருக்கின்றனர். ஒருநாள் ஸோலோன் மக்களிடையே அறப்பிரச்சாரம் செய்யப் போனார். அவர் கையில் ஒரு பழம் இருந்தது. அது அழுகிப் போய் இருந்தது. ஸோலோன் தன்னைச் சுற்றி இருந்த மக்களிடம் பேசினார். இந்த அழுகிய பழத்திற்குப் புத்துயிரூட்ட இதை புதுமைப்படுத்த யாரால் முடியும்?



யாராலும் முடியாது என்று மக்கள் தலை அசைத்தார்கள். அழுகிய பழத்தை என்ன செய்ய முடியும்? அதை

எப்படிப் புதுப்பிக்க முடியும்? அதைத் தூக்கிக் குப்பையில் போட வேண்டியது தான்.

பதில் வராததைக் கண்ட ஸோலோன் கையில் இருந்து பழத்தை நான்கு துண்டுகளாக வெட்டினார். அதிலிருந்த விதைகளை எடுத்தார். இந்தப் பழத்தைப் புதுப்பிக்க, அழுகிய பழத்தைப் புதுப்பழமாக்க ஒரு வழிதான் உண்டு. இந்த விதைகளை மண்ணில் விதைக்க வேண்டும். இந்த விதைகளில் இருந்து செடி வளரும். புதுப்பழங்கள் பழுக்கும்.

மக்கள் இந்த தரும ஞானியின் தீர்க்க தரிசனத்தையும், ஞானத்தையும் கண்டு வியந்தார்கள். அழுகிய பழத்திற்குள் உயிருள்ள விதைகள் இருக்கும் என்பதே அவர்கள் மறந்து போய் விட்டார்களே.

சிலசமயம் மனிதகுலமும் அழுகிப் போய் விடுகிறது. நாற்றம் எடுக்கிறது. மனிதகுலத்தின் விதைகள் அதன் குழந்தைகளே. அவர்களுக்கு நல்ல பண்புகளைக் கற்பியுங்கள். அவர்களைக் கவனித்து வளர்த்து விடுங்கள். மனிதகுலம் புத்துயிர் பெற அவர்கள் உதவுவார்கள்.

**வினோபாஜி கூறியது**

## 1757) பாவம் செய்ய முடியாதவர்

சாவினிடம் ஏற்படும் பயத்தை நாம் சமாளிக்கவும், அதைக் கடத்தல் நமக்குச் சுலபமாகவும் வேண்டும் என்பது சாவை நினைத்துக் கொண்டிருப்பதற்குள்ள மற்றொரு காரணமாகும். ஏகநாத சுவாமிகளைப் பற்றிய செய்தியொன்றுண்டு. ஒருவன் அவரிடம் ‘‘சுவாமி, தங்கள் வாழ்க்கை சிறிதும் சிக்கலற்றதாய், பாவமற்றதாய் இருக்கிறதே! எங்கள் வாழ்க்கை ஏன் அவ்வாறு இல்லை? தாங்கள் ஒருவரையும் கோபிப்பதில்லை; தங்களுக்கு எவருடனும் சண்டை சச்சரவோ, விரோதமோ, வழக்கோ ஏற்படக் காணோம். தங்கள் சுபாவம் எவ்வளவு அமைதியும், அன்பும் பொருந்தியதாய், எவ்வளவு புனிதமாயிருக்கிறது!’’ என்று வியந்தான். அதற்கு ஏகநாதர், ‘‘இப்பொழுதைக்கு என் விஷயம் இருக்கட்டும். உன்னைப் பற்றி எனக்கொரு விஷயம் தெரிய வந்திருக்கிறதே. இன்றைக்கு ஏழாம் நாள் நீ இறந்து போவாய்’’ என்றார். ஏகநாதர் வாயிலிருந்து வந்ததை யார் தான் பொய் என்று எண்ணுவார்கள்? ஏழு நாளில் சாவு, நூற்றறுபத்தெட்டு மணி நேரம் தான் எஞ்சியிருக்கிறது! ஏ கடவுளே! இதென்ன ஆபத்து! அம்மனிதன் அவசர அவசரமாய் வீட்டிற்கு ஓடோடியும் சென்றான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. இறுதிக்காலம் கருதி எல்லாவற்றையும் முடித்துக் கொள்வதாய் பேசிக் கொண்டிருந்தான். இப்பொழுது அவனுக்கு நோய் உண்டாகிவிட்டது. படுக்கையில் நீட்டிப் படுத்துவிட்டான். ஆறு நாட்கள் கழிந்தன. ஏழாம் நாள் ஏகநாதர் அவனைப் பார்க்க வந்தார். அவன் நமஸ்காரம் செய்தான். ஏகநாதர், ‘‘எப்படி இருக்கிறாய்?’’ என்றார். அவன்,

‘‘எல்லாம் ஆயிற்று; இனி போகவேண்டியதுதான்!’’ என்றான். ஏகநாதர், ‘‘இந்த ஆறு நாட்களில் எவ்வளவு பாவம் செய்தாய்? எத்தனை தீய எண்ணங்கள் மனத்தில் உதித்தன?’’ என்றார். மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவன், ‘‘நாதரே, தீய விஷயங்களைக் குறித்து எண்ணுவதற்கு நேரம் ஏது? மரணம் தான் சதா கண்முன் நின்று கொண்டிருக்கிறதே!’’ என்றான். ஏகநாதர், ‘‘என் வாழ்க்கை சிறிதும் பாவமற்றதாய்



இருப்பதற்குக் காரணம் இப்பொழுது புரிந்து விட்டதல்லவா? மரணம் என்ற சிங்கம் எப்பொழுதும் எதிரே நின்று கொண்டிருக்கையில் எவருக்குத் தீய எண்ணங்கள் தோன்றும்? பாவம் செய்வதற்கும் கவலையற்ற நிலை வேண்டும்! சாவைப் பற்றியே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருத்தல் பாவத்தினின்றும் தப்புவதற்குள்ள ஓர் உபாயமாகும். மரணம் எப்பொழுதும் எதிரில் நின்று கொண்டே இருக்குமாயின் மனிதன் எந்த வலிமையின் துணைகொண்டு பாவம் புரிவான்?’’ என்றார்.

**ஏக்நாத்ஜி கூறியது**

## 1758) அகம்பாவம் கொண்டவன் தன்னிலை இழக்கிறான்

மனிதனுக்கு குழந்தைப் பருவத்திலேயே அகந்தை உணர்வு தோன்றி விடுவதைக் காண்கிறோம். உதாரணத்திற்குச் சொல்லப் போனால், ஒருவன் குழந்தைப்பருவத்தில் தன் தங்கையைக் கடிந்து கொண்டமைக்கு பெற்றோர்கள் அவனை மன்னிப்புக் கேட்கச் சொன்னால், அவனுக்கு உடனே ரோஷமும், ஆத்திரமும் பொத்துக் கொண்டு வெளிவரும். எனக்கு இச்சமயத்தில் என் இளமைப்பருவ சம்பவம் ஞாபகத்தில் வருகிறது. ஒருசமயம் என் தவற்றைக் கண்டித்து என் பெற்றோர்கள் மன்னிப்புக் கேள் அல்லது பசும் சாணியைத் தின்னும்படி என்னை வற்புறுத்தினார்கள். நான் மன்னிப்புக் கேட்காமல் பசும்

சாணியைத் தின்ன முற்பட்டேன்! இதை முழுமையாக ஆராய்ந்தால் ஒரு விஷயம் புலனாகிறது. மனிதனை ஆத்திரமூட்டுவது புறச்சூழ்நிலையல்ல. மனிதனின் ஆசாபாசங்களே அதற்குக் காரணமாக அமையவல்லது.

## 1759) இன்றைய தினத்தை கவனித்துக்கொள்

சீடன் குருவிடம் நேரிடையாகக் கேள்வி கேட்டான் ‘‘குருவே! நீங்கள் மறுபிறப்பை நம்புகிறீர்களா?’’ குருநாதர் பதில் கேள்வி கேட்டார். ‘‘நீ ஏன் அந்த விஷயத்தில் விடாப்பிடியாக நிற்கிறாய்?’’ சீடன் கேட்டான். ‘‘ஏன் கேட்கக் கூடாதா?’’ குரு நிதானமாக பதில் சொன்னார். ‘‘உன் முன் அழகாக தென்றல் வீசும் இனிய நாள் இது. வசந்த காலத்தில் மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. வெயிலும் அதிகம் இல்லை. ஆனால் நீயோ ஒரு குழந்தையைப் போல் இருக்கிறாய். சில குழந்தைகள் நாளைக்குச் சாப்பாடு கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற பயத்தில் இன்றைய சாப்பாட்டையே சாப்பிட மறுக்கும். நீயும் அதுபோல பட்டினி கிடக்கிறாய். இன்றைய சாப்பாட்டை நன்கு சாப்பிடு. இன்றைய வேலையை நன்கு செய்து விடு. ஒவ்வொரு நாளையும் பரிபூரணமாக வாழ்ந்து விடு. மறுபிறவி தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும்.’’

## 1760) இப்பிறவியிலேயே செத்தவர்கள்

சீடன் அமுதநாதன் குருவைக் கேட்டான். மரணத்திற்குப் பிறகு மறுபிறவி கிடையாது என்று சிலர் கூறுகின்றார்களே. குருநாதர் பிடியில் அகப்பட்டுக் கொள்ளாமல் அப்படியா சொல்கிறார்கள் என்றார். சீடன் அமுதநாதன் சொன்னான். மறுபடியும் நண்பர்களைப் பார்க்க முடியாது. யார் பேசுவதையும் கேட்க முடியாது. யாரையும் நேசிக்க முடியாது. நடமாட முடியாது. அப்படி இன்னும் ஒரு வாய்ப்புக் கிடைக்காமல் செத்துப் போவது பரிதாபம் இல்லையா? குருநாதர் கேட்டார். பரிதாபம் என்கிறாயா? பெரும்பாலான மக்கள் மரணம் அடைவதற்கு முன்பே அப்படித்தான் இருக்கிறார்கள். எதையும் கூர்ந்து பார்ப்பது இல்லை. எதையும் கூர்ந்து கேட்பது இல்லை. யாரையும் நேசிப்பது இல்லை. எங்கும் செல்வது இல்லை. இவர்கள் இன்னும் சாகவில்லை. செத்தாலும் இவர்களால் உலகில் மாற்றங்கள் ஒன்றும் வந்து விடாது.

### கேந்திரச் செய்தி

ஜி. குஞ்சம்மாளும், எம். லெட்சுமியும் மன்னார் கோவிலில் நடத்திய குருபூர்ணிமா விழாவில் திரு. சங்கர நாராயணன், திரு. பரமசிவன், திருமதி சந்திரா, சமய வகுப்புக் குழந்தைகள் குருவின் மகிமையை விளக்கும் கதைகளை எடுத்து பரிமாறிக் கொண்டனர்.

# புறச்சூழலும், வளம் குன்றா விவசாய வளர்ச்சியும்

விவசாயத்திற்கு உதவும் புறச்சூழல் எப்படி இருக்கும்? நொறுங்கித் தரம் குன்றும் புறச்சூழல் விவசாயத்திற்கு உதவாது. அல்லது மிகக் குறைந்த அளவே உதவுகின்ற புறச்சூழல் எப்படி இருக்கும்? இவற்றுக்குள் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**1) இயற்கையான பௌதீக புறச்சூழல்:** நலிவுற்ற சூழல் அதிகக் குளிருடனோ, வெப்பத்துடனோ இருக்கும். மண்ணும் தரம் குன்றி பாலைவனமாகத் துவங்கி இருக்கும். காடுகள், தரையடித் தண்ணீர் முதலிய பொதுச் சொத்துக்கள் மக்கள் தொகை அதிகரிப்பதால் நலிந்து போகும். செடி, கொடிகள் அரிதாகவே காணப்படும். மேல் மண்ணில் தண்ணீர் ஈரப்பசை குறைவாகவே இருக்கும். இக்காரணத்தால் அதில் உரம் முதலிய இடுபொருள்களை அதிகமாகப் போட முடியாது. அதிக நீர்ப் பாசனத்தையும் அத்தகைய நிலங்கள் தாங்க மாட்டா. இதற்கு மாறாக வளம் குன்றாத நல்ல நிலத்தில் தட்ப, வெப்ப நிலை விவசாயத்திற்கு உதவுவதாக இருக்கும். அதில் அதிக அளவில் உரம் போடலாம். உரத்தைத் தாங்கும் சக்தி நிலத்திற்கு உண்டு. அதிக நீர்ப்பாசனத்தையும் பல பயிர் சுழற்சிகளையும் இந்தப் பயிர்கள் தாங்கிக் கொள்ளும், காலப்போக்கில் நிலத்தில் தண்ணீர் தேங்குதல், உப்படித்துப் போதல், மண், உரச்சத்து குன்றுதல் ஆகிய ஏற்படும் ஆபத்துக்கள் உண்டு. இங்கு வாழும் மனிதர்களுக்கும், ஆடு, மாடுகளுக்கும், உடல்நலத்திற்கும், காலப்போக்கில் தீமை உண்டாகும். விவசாயம் வியாபாரமயமாகும் போது காடுகள் முதலிய இயற்கை வளங்கள் குறைந்து கொண்டே போகும்.



**2) புறச்சூழல் விவசாயம்:** நலம் குன்றிய நிலத்தில் விவசாய மக்கள் உயிர் பிழைத்து வாழும் அளவுக்குத் தான் இருக்கும். இங்கு விளையும் பயிர்களும், குறைந்த அளவே வருமானம் கொடுக்கும். இங்கு சந்தைக்குக் கொண்டு செல்லப்படும் விவசாய உற்பத்திப் பொருள்கள் குறைந்த அளவில் இருக்கும். வளர்ச்சி தேங்கி நிற்கும். இப்பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டமும்,

தொழிலாளர்கள் தங்கள் திறமைக்குக் குறைந்த அளவில் வேலை செய்ய வேண்டி இருப்பதும் நிகழும். இங்கு வாழும் மக்கள் அதிக அளவில் காடுகளையும், நீர் நிலைகளையும் நம்பிப் பிழைப்பர். கிராம மக்களிடையே வளங்களும், வருமானமும் குறைவாக இருக்கும். உற்பத்தியான பொருள்கள் தரம் குறைவாக இருக்கும். சந்தையில் விற்பதற்கே குறைந்த அளவுதான் உபரி விளைச்சல் இருக்கும். லாபமும் குறைவு தான். இங்கு வாழும் மக்கள் குடிதண்ணீர், விறகு இவற்றைப் பெறவே அதிக முயற்சி செய்ய வேண்டும். அதிகப் பணம் செலவாகும். இங்கு வாழும் மக்கள் வாழ்க்கைத்தரம் குறைவாகவே இருக்கும். இதற்கு எதிராக வளம் நிறைந்த நிலங்களின் பொருளாதாரச் சூழல் சிறப்பாக இருக்கும். வியாபார ரீதியில் விவசாயம் நடக்கும். ரப்பர், தேயிலை, பருத்தி போன்ற ஒற்றைப் பயிர்களை அதிகம் விவசாயம் செய்வார்கள். வளர்ச்சி வேகம் அதிகமாக இருக்கும், தேக்கமும் உண்டு. இங்கு வாழும் மக்கள் வருமானத்திற்குப் பலவித வழிகளைக் கொண்டிருப்பார்கள். உபரி விளைச்சல் அதிகமாக இருக்கும். பொருள்களின் தரம் மேலோங்கி இருக்கும். இங்கு வாழும் மக்களுக்கு குடிதண்ணீர், கல்வி வசதி, மருத்துவ வசதி முதலிய அடிப்படைகள் சுலபமாகக் கிடைக்கும். மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்து இருக்கும்.

**3) சமுதாயச் சூழல்:** தரம் குன்றிய நிலங்களில் வாழும் மக்களுக்குச் சமுதாய அளவிலான நுகர்பொருள்கள் குறைவாகவே கிட்டும். கல்வி வசதி, மருத்துவ வசதி, சுகாதார வசதி (சாக்கடை, தெருக்கூட்டுதல்) குடிதண்ணீர் ஆகியவை குறைவாகவே இருக்கும். இங்குள்ள மக்களின் பண்பாடு பலமுள்ளதாக புறச்சூழலோடு தொடர்பு உடையதாக இருக்கும். பற்றாக்குறையால் மக்களின் மனப்பாங்கு, வளங்களை எப்படியாவது பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வுடன் இருக்கும். இப்பகுதியில் அரசியல் விழிப்புணர்வும் குறைவாகவே இருக்கும். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் குறுகிய காலத்தில் எப்படியாவது தப்பிப் பிழைத்து உயிர் வாழ்வதற்கு மக்கள் முதலிடம் கொடுப்பர். இதற்கு மாறாக வளம் மிகுந்த நிலங்களிலோ வாழும் மக்கள் அரசியல் விழிப்புணர்வு சமுதாய நுகர்பொருள்கள் ஆகியவற்றில் மேன்மை பெற்று விளங்குவர். இம்மக்கள் தொழில் நுணுக்கங்களை அதிகம் சார்ந்து இருப்பார்கள். புறச்சூழலைப் பற்றி, சுரணை இன்றி, கவலையின்றி இருப்பார்கள். வியாபார யுக்தியில் இயற்கை வளங்களை நாசம் செய்வதும் அதிகமாக காணப்படும். இயற்கை வளங்ளைச் சுரண்டுவதில் மக்கள் ஒருவரோடு ஒருவர் போட்டி போடுவார்கள். குறுகிய காலத்தில் அதிக லாபம் சம்பாதிக்கும் போக்கு காணப்படும்.

**4) புறச்சூழல் கொள்கைகள்:** நலிவுற்ற நிலங்களில் வாழும் மக்கள் வளர்ச்சியைப் புறக்கணிப்பார்கள். அல்லது அரை மனத்துடன் முயற்சி செய்வார்கள். இம்மக்களின் வளர்ச்சி சமச்சீர் இன்றி ஒருபக்கம் சாய்வதாக அமைந்திருக்கும். பயன்படுத்தப்படும் தொழில் நுணுக்கங்கள் பொருத்தம் அற்றவையாக இருக்கும். எல்லா நோய்க்கும் ஒரே மருந்து என்னும் போக்கு காணப்படும். தரம் குறைந்த நிலங்களில் வாழ்பவர்கள் இயற்கை வள

ஆதாரங்களைப் புறக்கணிப்பார்கள். பொது மக்கள் பங்கேற்றல், சமுதாயமே வளங்களை நிர்வகித்தல், உள்ளூர் நடைமுறை அறிவு இவையெல்லாம் ஒதுக்கித் தள்ளப்படும். கொள்கை வகுப்பவர்கள் பல விஷயங்களில் அலட்சியமாக இருப்பார்கள். புறச்சூழலைப் பாதுகாக்கும் தொழில் நுணுக்கத்தை வளர்க்க மாட்டார்கள். உள்ளூர் வளங்கள், உள்ளூர் மனிதர்கள் நன்கு பயன்படுத்தப்படாமல் போய் விடுவார்கள். ஆனால் அண்மைக்காலங்களில் இத்தகைய நிலப்பகுதிகளில் அதிகக் கவனம் செலுத்தினால் தான் நாட்டின் ஒட்டுமொத்த வளம்குன்றா வளர்ச்சி நடக்கும் என்பதை கொள்கை வகுக்கும் அறிவாளிகள் புரிந்துகொள்ளத் துவங்கி இருக்கின்றனர். நேர் மாறாக, வளம் மிகுந்த நிலங்களில் வாழும் மக்கள் கொள்கைத் திட்டம் வகுப்பவர்களின் செல்லப்பிள்ளைகளாகச் சலுகை காட்டி வளர்க்கப்படுகிறார்கள். இயற்கை வளங்களைச் சேமித்து பாதுகாக்கும் கொள்கைகள் பின்பற்றப்படுவது இல்லை. உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் உற்சாகம் அதிகம். வளம்குன்றா வளர்ச்சியில் உற்சாகம் குறைவு. அரசியல் நெருக்கடிகளும், வாடகை வாங்கும் போக்கும் அதிகமாக இருக்கும். மக்களின் வியாபார நோக்கத்தைப் பயன்படுத்தி வளம்குன்றா கொள்கைகளை வளர்ப்பதில் கொள்கையாளர்கள் தோல்வி அடைவது இந்த நிலங்களில் தான்.



**5) வளங்குன்றா வளர்ச்சியின் அறிவும் நெறிமுறையும்:** நலிந்து போன நிலங்கள் வளம்குன்றா வளர்ச்சியில் மிகவும் தளர்ந்த நிலையில் இருக்கின்றன. சிலவே ஏறுமுகமாகக் காணப்படுகின்றன. நீர்ப்பாசனம் இல்லாத நில விவசாயம், சந்தை ஆகியவை தற்காலத்தில் அதிகம் கவனிக்கப்படுகின்றன. இங்கு வளம்குன்றா வளர்ச்சி நடக்கக் கூடிய ஒன்று தான். ஆனால் பொருத்தமான கொள்கை வேண்டும். தொழில் நுட்பம் வேண்டும். நிறுவனங்கள் வேண்டும். விழிப்புணர்வு வேண்டும். கல்வி வேண்டும். வளம் மிகுந்த நிலங்களில் மிக உயர்ந்த நிலையில் மக்கள் வாழ்ந்தாலும் வளர்ச்சிப் பாதை சரிவை நோக்கியே செல்லும். இங்கும் வளம்குன்றா வளர்ச்சிக்கென விழிப்புணர்வு தேவை. இயற்கை வளங்களை சந்தை அடிப்படையில் மதிப்பிட வேண்டும். அதிரடியான சந்தை அணுகுமுறைகள் தீமையையே உண்டாக்கும்.

**ஆதாரம்:** புதுடில்லி, விஞ்ஞான புறச்சூழல் மையம் வெளியிட்ட **த சாலன்ஞ் ஆஃப் த பாலென்ஸ்**, பதிப்பாசிரியர் – அனில் அகர்வால்

வளம்குன்றா வளர்ச்சி – பெட்டிச்செய்தி

## மண்ணுக்கு வளமூட்டுங்கள்

1829-ம் ஆண்டிலேயே குஜராத்தின் சூரத் மாவட்டத்தில் வாழ்ந்த ஒரு பார்சி விவசாயி சொன்னார். கரும்பு வயலில் பயிர் சுழற்சியில் உளுந்து பயிரிட்டால் கரும்புக்கு உரம் கிடைக்கும். மண் உரம் குன்றுவது தடுக்கப்படும். கரும்பு வயலில் உளுந்து பயிரிட்டு செடி ஒரு அடி உயரம் இருக்கும் போது உழுதுவிடுவார்கள். ஆனால் இன்றோ நிலைமை தலைகீழ் ஆகி விட்டது. ஒவ்வொரு ஆண்டும் விவசாயப் பயிர்களால் பாரத மண்ணில் இருந்து முப்பது லட்சம் டன் புரதச் சத்து அகற்றப்படுகிறது. 15 லட்சம் டன் பாஸ்பரஸ் சத்து அகற்றப்படுகிறது. 35 லட்சம் டன் பொட்டாசியச் சத்து அகற்றப்படுகிறது. தாவரங்கள் மூலம் நிலத்திற்குத் திருப்பி அளிக்கப்படும் உரங்கள் குறைவே. 18 லட்சம் டன் புரதச் சத்தும் ஆறு லட்சம் டன் பாஸ்பரஸ் சத்தும் 18 லட்சம் டன் பொட்டாசியம் சல்பேட்டும் தான் மண்ணுக்குத் திருப்பிக் கொடுக்கப்படுகின்றன. பற்றாக்குறை மிக அதிகம். விவசாயிகள் பாரம்பரிய விவசாய நெறிக்கு திரும்ப வேண்டும். நீண்ட தாள் ரக தண்டுடைய பயிர் ரகங்களை விதைக்க வேண்டும். பருப்பு வகைகளை மாற்றி மாற்றிப் பயிரிட வேண்டும். மிருகம் இழுக்கும் உழவு நெறிகளைக் கொண்டு வர வேண்டும். மண்ணுலகம் முழுவதும் 14 கோடி டன் புரதச் சத்தை மண் பாக்டீரியாக்கள் மண்ணில் சேமிக்கின்றன, நிறுத்தி வைக்கின்றன. இதில் ஒன்பது கோடி டன் பயிர்களுக்குக் கிடைக்கிறது. உலகத்தில் உள்ள எல்லா ரசாயன உரங்களும் சேர்த்து நான்கு கோடி டன் நைட்ரஜனைத் தான் மண்ணுக்குத்தர முடிகிறது.

### கேந்திரச் செய்தி

கோவில்பட்டி கிளையில் குருபூர்ணிமா நிகழ்ச்சிகளை, யோகப் பயிற்சி வகுப்பிலும் எவரெஸ்ட் மாரியப்பன் நாட்டார் மேல்நிலைப்பள்ளியிலும் நல்லமுறையில் நடத்தினர். தலைமை ஆசிரியர் சுசீலா தேவி, கேந்திர ஒருங்கிணைப்பாளர் ஜி. கிருஷ்ணசாமி, சகோதரி ரேகா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். விவேகானந்தர் படக்கண்காட்சி, புத்தகக் கண்காட்சி இவை சிறப்பு நிகழ்ச்சிகளாம். ஜி.வி.என். சுயநிதிக் கல்லூரியில் நடந்த குருபூர்ணிமா நிகழ்ச்சியினை கேந்திரத் தொண்டர்கள் திரு. நாகசாமி, திரு. பரமகுரு நடத்தினர். கேள்வி பதில் நிகழ்ச்சி சுவாரஸ்யமாக இருந்தது. சிவகிரி பாலர் பள்ளியில் குருபூஜை விழா வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. சுப்புலாபுரம் பாலர்பள்ளியில் ஜெய ஷீலாவும், குமாரபுரம் பாலர் பள்ளியில் காளியம்மாளும் குருபூஜை விழாவை அழகுடன் நடத்தினர்.

# நம்பிக்கைதான் முக்கியம் – குடும்பமும் பொருளாதாரத்தின் அரசியலும்

ஃபிரான்சிஸ் ஃபுருயாமா

**14. எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தாலும், பொருளாதார நடவடிக்கைகள் அனைத்துமே தர்க்கபூர்வமானவை பகுத்தறிவுக்கு ஒத்து வருபவை, பயன்பாட்டுக்கு முக்கியத்துவம் தருபவைதானே?**

இந்தக் கருத்தே கேள்விக்குரியது. மனிதர்கள் பற்பல சமுதாயக் குழுக்களில் கால்பதித்து நிற்கிறார்கள். குடும்பமானது, அக்கம்பக்கத்தினரின் நட்புறவு, தொழில்முறை உறவு, சமயக்குழுக்கள், தேசநலன் இவற்றின் தேவைகளுடன் தத்தம் தேவைகளை சரிக்கட்டிக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. ஒரு குடும்பத்திற்காக அதன் உறுப்பினர் படும் கவலை, கடமை, வெறும் லாபநஷ்டக் கணக்கில் இருந்து விளைந்தவை அல்ல! அக்குடும்பமே ஒரு வியாபாரம் செய்தாலும் சரி, லாபம் நஷ்டம் என்பதெல்லாம் அப்புறம் தான். முன்பே நிலைத்திருக்கும் குடும்ப உறவுகள் தான் வியாபாரத்திற்கே ஒரு உருவத்தைக் கொடுக்கின்றன. ஒரு கம்பெனியின் அமைப்புப் பட்டியலில் தொழிலாளர்கள் என்பவர்கள் வெறும் சாளரங்கள், ஜன்னல் கௌண்டர்கள் இல்லை! அவர்கள் ஒற்றுமையை வளர்த்துக் கொள்கிறார்கள், விசுவாசத் தன்மையை வளர்த்துக் கொள்கிறார்கள். அவர்களுடைய விருப்பு வெறுப்புக்களே பொருளாதார நடவடிக்கைகளின் உருவத்தைத் தீர்மானிக்கின்றன. ஒரு மனிதர் சமுதாய ரீதியிலும் நீதிநெறி அடிப்படையிலும் எப்படி நடந்து கொள்கிறார் என்பதும் சுயநல, உடனடிப்பலன்களை விரும்பும் உணர்வும் இணைந்தே இருக்கின்றன. இந்த இணைப்பு பல மட்டங்களில் தளங்களில் வேலை செய்கின்றது.



**15. ஆனால் பண்பாடுகளோ அதிகார ஏற்ற இறக்க வரிசைகளை (ஹியரார்க்கிகளை) உண்டு பண்ணுகின்றன. தகவல் யுகத்தில் அதிகார ஏற்ற இறக்க வரிசைக்கு இடம் கிடையாது. சமத்துவத்திற்குத்தான் இடம் உண்டு.**

தகவல் யுகத்தின் தேவதூத உற்சாகிகள் அதிகார வரிசை, அதிகாரம் இவை உடைந்து நொறுங்குவதைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு முக்கியமான காரணியைக் கவனிக்கத் தவறி விடுகிறார்கள. பரஸ்பர நம்பிக்கை, அதன் ஆதாரமாக விளங்கும் பொதுவாகப் பகிர்ந்து கொள்ளப்படும் நீதிநெறி அளவுகோல்கள், இவற்றையும் நாம் கவனித்தாக வேண்டும். சமுதாயங்கள் என்பவையே பரஸ்பர நம்பிக்கையைச் சார்ந்தவைதான். நம்பிக்கை இல்லாமல் சமுதாயங்கள் தானே முன்னெழுந்து வரமுடியாது. ஒரு சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களும் நீதி நெறிகளை வாய் பேசாமல் ஏற்று நடப்பார்கள் என்று நம்புவதற்கில்லை. இதனால் தான் அதிகார ஏற்ற இறக்க வரிசைகள் அவசியமாகின்றன. ஒரு சமுதாயத்தில் சுரண்டல் பேர்வழிகளும் ஒட்டுண்ணிகளும் தண்டச்சோறு தின்பவர்களும் இருப்பார்கள் என்றால் அதிகார ஏற்ற இறக்க வரிசையும் தேவைப்படவே செய்கிறது. எல்லா மக்களும் எல்லா நேரங்களிலும் நீதி நெறி ஒழுக்கங்களை நெஞ்சார ஏற்று, தம்பங்கான பணிகளை நியாயமாகச் செய்வார்கள் என்று நம்ப முடியாது. ஆகவே அதிகார ஏற்ற இறக்க வரிசை தேவைதான். பொருளாதார உலகில் கார்ப்பரேஷன்களும் சமூக மட்டத்தில் சமுதாயங்களும் அதிகார ஏற்ற இறக்க வரிசைகளை ஏற்படுத்தவே செய்கின்றன. தெள்ளத் தெளிவான விதிகளும் தண்டனை அபராதங்களும் இந்த அதிகார விதிகளை ஏற்று நடக்காதவர்கட்கு இந்த ஹியரார்க்கி பொருந்தும்படி வற்புறுத்துகின்றன.

### 16. குடும்பம் சார்ந்த மனப்போக்குக்கும், பரவலான சமூக இணக்கப் போக்குக்கும் இடையில் ஏத்தகைய உறவு இருக்கிறது?

குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயங்களில் கலகலப்பாகப் பழகும் வழக்கம் அதிகம் இருக்கிறது. ரஷ்யாவில் மக்கள் கலந்து பழக ஒரே வாய்ப்பு, குடும்பம், குலம், இனம் ஆகியவைதான். இத்தகைய சமுதாயங்களால் தொண்டு நிறுவனக் கூட்டுக்கள் பலவீனமாக இருப்பது அகலும், ஏனெனில் உறவினர் அல்லாத மக்கள் ஒருவரை ஒருவர் நம்புவதற்கான ஆதாரங்கள் குறைவு. உதாரணம் தைவான், ஹாங்காங், சீன மக்கள் குடியரசு.

### 17. குடும்ப வாழ்க்கை நலிவடைந்து உடையும் போது என்ன நடக்கிறது?

அமெரிக்காவின் உதாரணத்தையே எடுத்துக் கொள்வோமே. மக்கள் ஒன்று கூடி வாழ்வதற்கு மிகவும் அடிப்படையான உதாரணம் குடும்பம் ஆகும். மிகச்சிறிய சமூக அமைப்பு குடும்பம் ஆகும். அமெரிக்காவில் 1960-ம் ஆண்டில் இருந்து குடும்ப வாழ்க்கை பெரும் அளவுக்குத் தரம் தாழ்ந்து விட்டது. விவாகரத்து விகிதம் திடீரென அதிரித்தது. ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள் அதிகரித்தன. குடும்பத்திற்கு வெளியிலும், சமுதாய அமைப்பு நொறுங்கி உடையும் போக்கு தொடர்ந்து காணப்பட்டது. அக்கம் பக்கத்தவர் நட்பு, சர்ச்சுகளில் வருகை, தொழிற்சங்கம் இவையும் நலிவடைந்தன. அதேசமயத்தில் மக்கள் ஒருவரை ஒருவர் நம்புவது மிகப்பெரும் அளவில் குறைந்து போனது. அமெரிக்க மக்கள் தங்களுடைய சக குடிமக்களைப் பார்த்து அலுப்பும், வெறுப்பும் அடைந்தனர்.

இதன் அளவுகோல் குற்றங்கள் அதிகரித்தன. சண்டை சச்சரவுகளை தீர்த்துக்கொள்ள வழக்குப் போடுவது பூதாகாரமாக அதிகரித்தது. அண்மைக் காலங்களில் அரசாங்கம் என்ன செய்கிறது தெரியுமா? நீதிமன்றம் என்ற பெயரில் தனி நபர்களின் உரிமைகளை அசுர வேகத்தில் அதிகரித்து வருகிறது. பெரிய அளவிலான சமுதாயங்கள் தங்கள் உறுப்பினர்களுக்கு நன்னடத்தை என்றால் என்ன? என்று தரம் நிறுவுவது குறைந்து போயிற்று. தனி நபர் உரிமை என்ற பெயரில் சமுதாயம் சுருங்கி உடைந்து, நலிந்து, மெலிந்து போயிற்று.

(கட்டுரை தொடரும்)

## கர ஆண்டு ஐப்பசி மாத ஹிந்துப் பண்டிகைகள்
### 2011 அக்டோபர் 18 முதல் நவம்பர் 16 வரை

**அக்டோபர் –**17 உலக வறுமை ஒழிப்பு நாள், ஸ்ரீமத்துவாச்சாரியர் பிறந்த நாள், **18 –** துலா நீராடுதல் துவக்கம், **21 –** காவல்துறையினர் நினைவு நாள், **23 –** ரம்பா ஏகாதசி, **24 –** தன்வந்தரி பிறந்த நாள், ஐ.நா. தினம், உலக வளர்ச்சி பற்றிய தகவல் நாள், ஆயுத ஒழிப்பு வாரம் இன்று துவக்கம், **25 –** நரக சதுர்த்தசி, **26 –** தீபாவளி பண்டிகை, மகாவீரர் நிர்வாணதினம், கணேஷ் சங்கர் வித்யார்த்தி பிறந்த நாள், **28 –** சகோதரி நிவேதிதை பிறந்த நாள், **30 –** டாக்டர் ஹோமி பாபா பிறந்த நாள், உலக சிக்கன நாள், **31 –** வல்லபபாய் படேல் பிறந்த நாள், இந்திராகாந்தி நினைவு நாள், கந்த சஷ்டி, திருச்செந்தூர், பழனி, சூர ஸம்ஹாரம்.

**நவம்பர் – 2** தொழிற்சாலை பாதுகாப்பு நாள், **5 –** தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் நினைவு நாள், தஞ்சை மாமன்னர் ராஜராஜ சோழன் சதய விழா, **6 –** பிரபோதினி ஏகாதசி, நாமதேவர் பிறந்த நாள், கவி காளிதாஸர் பிறந்த நாள், **7 –** டாக்டர் சர் சிவி ராமன் / பிபின் சந்திர பால் பிறந்த நாள், **8 –** சட்டசேவைகள் நாள், **9 –** வைகுண்ட சதுர்த்தசி, **10 –** மகா அன்னாபிஷேகம், குருநானக் பிறந்த நாள், **14 –** குழந்தைகள் தினம், ஜவாஹர்லால்நேரு பிறந்த நாள், உலக நீரிழிவு நோய் தினம், பீர்பால் ஸாஹ்னி பிறந்தநாள், **16 –** துலா நீராடுதல் பூர்த்தி, உலக சகிப்புத் தன்மை நாள்.

கேந்திரச் செய்தி

## வள்ளியூரில் பெற்றோர் வழிபாடு

வள்ளியூரில் முருகன் ஆலயம் திருப்புகழில் பெருமை பெற்ற தலம் ஆகும். அத்திருக்கோவிலின் பொறுப்பாளர்கள் எல்லோரும் கேந்திர அன்பர்கள் ஆவார்கள். அக்கோவிலில் நடந்த பெற்றோர் வழிபாட்டில் 85 பேர் கலந்து கொண்டனர். வள்ளியூரில் முருக பக்தப் பேரவையின் திருவிளக்கு வழிபாட்டுக் குழுவினர், திருவாதவூரார் திருமுறை மன்றத்தினர், விவேகானந்த கேந்திரம் இணைந்து நிகழ்ச்சி ஏற்பாட்டைச் செய்தனர். கேந்திரத் தொண்டர் வி. ஜானகி புஷ்பம் பூஜையை நடத்தினார்.

## நற்குண வளர்ச்சி

# மானுட நற்குணங்கள்

ஸ்வாமி சுருதார்த்தானந்தா

### அஹிம்சை அல்லது உயிர்களைத் துன்புறுத்தாதிருத்தல்:



மானுட வாழ்வின் இன்னொரு உயரிய மதிப்புக்குணம் அஹிம்சை ஆகும்; இதன் பொருள் பிறரைப்பற்றிய தீய எண்ணங்களை அறவே ஒழித்து விடுதல் ஆகும். ஒரு விஷயம் பொதுவாகத் தெரிகிறது. நமக்குத் தீங்கு வராதவரை, பிறர்பால் நாம் கெட்ட எண்ணம் கொண்டிருப்பதில்லை.

நாம் போடும் நிபந்தனை இது தான். எல்லாம் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறவரையில் ஒரு படுகோழைகூட பிறர்பால் அதிசயிக்கத்தக்க அஹிம்சை தர்மத்தை செயல்படுத்திக் காட்டுவான். ஆனால் அவனுடைய குணம் பிறர்க்குத் தீங்கு இழைக்காதது என்பதற்கு இதுவல்ல சோதனை! அஹிம்சை என்பது உண்மையில் ஒரு கடினமான பயிற்சி.

பர்த்ருஹரி என்ற மன்னர் ஒரு முனிவராக மாறினார். அம்முனிவர் மனிதகுலத்தை நான்கு வகைகளாகப் பிரித்துள்ளார். அவர்களுள் தலையாயவர்கள் தன் சுயநல நோக்கங்களை விட்டுக் கொடுத்தாவது பிறருக்கு நன்மை செய்ய வல்லவர்கள்.

இரண்டாவது வகையினரை பர்த்ருஹரி **பொதுவகை மக்கள்** என்றழைக்கிறார். இவர்கள் நிபந்தனைகட்கு உட்பட்டு, பிறருக்கு நன்மைபுரிவார்கள்.

மூன்றாவது பிரிவினர் அசுர மனிதர்கள். அவர்கள் தன்னலத்திற்காக, பிறருக்குத் தீமை புரியவும் தயங்கமாட்டார்கள்.

இன்னொரு வகையினரும் உண்டு. இவர்கள் எந்தக் காரணமும் இன்றியே பிறருக்குத் தீமை செய்பவர்கள். பர்த்ருஹரி ஏளனமாக “இவ்வகை மனிதர்களை என்ன சொல்லி அழைப்பதென்றே தெரியவில்லை” என்கிறார்.

இவ்வுலகில் அஹிம்சை எனும் மாபெரும் குணத்தைப் பயிலும் மனிதர்கள் உள்ளனர். பிறர் நமக்குத் தீமை புரிந்தாலும், நாம் அவர்கட்குத் தீமை புரியமாட்டோம் என்பது எப்படி? பகவான் புத்தர் பொருத்தமான விடை நல்குகிறார். "ஏனெனில் கோபத்தால் கோபத்தை வெல்ல முடியாது" பிறருக்குத் தீமை செய்யும் போது, நாம் இவ்வுலகின் தீமையை நிலைபெறச் செய்கிறோம். "உன் இடது கன்னத்தில் அறைபவனுக்கு உன் வலது கன்னத்தைக் காட்டு" என்று சொன்ன ஏசுகிறிஸ்து, அஹிம்சை என்ற இந்த மகத்தான குணத்தையே குறிப்பிட்டார். இரண்டாவது, வேதாந்தப் பார்வையில் பிறருக்குத் தீமை செய்யும் போது, நாம் நமக்கே தீங்கிழைத்துக் கொள்கின்றோம். ஏனெனில் அனைத்து உயிர்களிலும் ஆத்மாவே உள் நிற்கின்றது. மஹாத்மாக்கள் அவ்வப்போது பிறந்து இந்த மகத்தான உண்மையை நமக்குப் பல விதங்களில் கற்றுத் தருகிறார்கள். அவர்கள் பெருமுயற்சி செய்து, இயற்கையில் எங்கும் சாந்தியையும் சமாதானத்தையும் கொண்டு வரப் பாடுபடுகின்றனர். ஏனெனில் இயற்கையில் மூலச் சமநிலை சமாதானமும் சாந்தியுமே என்பதை அவர்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். அவற்றை அவ்வப்போது மறுநிலை நிறுத்த வேண்டும்.

புத்தரின் சிறுவயதில் அவருடைய தந்தை, அவரையும் தம்பியையும் ஆசிரிய நிபுணர்களிடம் அனுப்பி வில்வித்தை ஆயுதப்பயன் ஆகியவற்றைக் கற்கச் செய்தார். அவற்றை எல்லாம் விரைவிலேயே நன்கு கற்றான் கௌதமன். ஆனால் எந்த ஒரு உயிரினையும் குறிவைத்து அடிக்க அவன் மறுத்துவிட்டான். ஒருநாள் அரண்மனைத் தோட்டத்தில் அவன் ஆழ்ந்த சிந்தனையில் லயித்து இருக்கும் போது, அவன் தம்பி அடித்த அம்பினால் காயம்பட்டு, இறகுகளை அடித்துக் கொள்ளும் ஒரு பறவையின் ஒலியைக் கேட்டு அவன் திடுக்கிட்டு எழுந்தான். அவன் உடனே அப்பறவைக்கு மருந்து போட்டு மெள்ள மெள்ள அதனைக் குணப்படுத்தினான். தாயன்பு காட்டி அதனை கௌதமன் பார்த்துக் கொண்டான். இதனிடையே அவன் தம்பி வில்லும் அம்பும் கையில் தாங்கி அங்கே ஓடிவந்தான். அவன் இத்தனை நேரம் தேடிவந்த பறவை கௌதமனின் மடியில் சுகமாகப் படுத்திருப்பதைக் கண்டான். கோபத்துடன் அவன் தான் அடித்த பறவை தனக்கு வேண்டும் என்று கேட்டான். கௌதமனோ சாந்தமாக அவனிடம் தர மறுத்தான். அந்தப் பறவை, பாவம் அவனைச் சரண் அடைந்திருக்கிறது. என்ன கஷ்டம் வந்தாலும் அப்பறவைகயைக் காப்பதே தன் கடன் என்றான் கௌதமன். தம்பி ஓடிப்போய் மன்னன் சுத்தோதனனிடம் நியாயம் கேட்டான். தந்தை கௌதமனைக் கூப்பிட்டு அனுப்பினார். தன் செயலை நியாயப்படுத்திய கௌதமன் தந்தையிடம் கேட்டான். பறவையைத் தன்னிடம் வைத்துக் கொள்ளும் உரிமை யாருக்கு? அதனைக் கொல்ல முற்படுபவனுக்கா? அதனைக் காப்பாற்ற விழைபவனுக்கா? திகைத்துப் போன மாமன்னன் தன் மகன் பக்கமே நியாயம் இருப்பதை ஒப்புக் கொண்டார். (தொடரும்)

# கேந்திர நிறுவனர் மா. ஏக்நாத்ஜியின் புனித வாழ்க்கை வரலாறு

## ஏக்நாத்ஜி

ஆங்கிலம்: நிவேதிதா ரகுநாத் பிடே
தமிழ்: பொ. தங்கசுவாமி

ஸ்ரீஅரவிந்தருடைய "சாவித்திரி" காவியத்தில் ஒரு பத்தி ஏக்நாத்ஜியின் வாழ்வின் கடைசிப் பகுதிக்கு மிகவும் பொருத்தமாக விளங்குகிறது.

மிகவும் மகத்தான மனிதர்கள்
தன்னந்தனியே தான் வாழ்ந்தாக வேண்டும்
பிறரால் புகழப்பட்டும் அவர்
கனம் மிகுதனிமையில் நடக்கிறார்
தன்மைஒத்த இனத்தவரைப் படைக்க
அவர் செய்யும் முயற்சிகள் வீணே!
அவருடைய ஒரே பணித் தோழர்அவருக்குள்ளிருக்கும் சொந்தபலம் தான்!

ஸ்தாபனத்தின் வளர்ச்சி ஒரு உயிருள்ளதோர் வேலைக்கிரமம். அதனுடைய எண்ணம் விரிந்து வெளிப்படுதல் காலப்போக்கில்தான் நிகழும். எட்டு-பத்து வருடங்களில் அதை துரிதப்படுத்த முடியாது. ஏக்நாத்ஜி, காலப்போக்கில் அவருடைய பல சிந்தனைகள் புரிந்துகொள்ளப்படும். செயல் வடிவம் கொடுக்கப்படும் என்பதை அறிந்திருந்தார். கடைசியாக, இது இறைவனின் பணி. அவர் கவனித்துக் கொள்வார். உண்மையாகவே, பாதையில் ஏற்பட்ட சவால்களையெல்லாம் வெற்றிகண்டு விவேகானந்த கேந்திரம் இன்று நாடு முழுக்க 170 கிளைகளுடன் கல்வி, நன்னூல்கள் வெளியிடுதல், பாரம்பரியமிக்க சமுதாயங்களைப் பற்றி ஆராய்தல், கிராம முன்னேற்றம் மற்றும் இயற்கை வளஅபிவிருத்தி ஆகிய களங்களில் குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றி வருகிறது. ஏக்நாத்ஜியால் ஊன்றப்பட்ட விதை இன்று பெரிய ஆலமரமாக வளர்ச்சியடைந்துள்ளது. அவருடைய கருத்துக்களின் முன்னேற்றமான விரிந்து வெளிப்படுதல் நிகழ்ந்து வருகிறது. அவர் தொண்டர்களை உருவாக்கிய தன்மை வளர்ந்து வரும் ஸ்தாபனத்தில் பலன் தந்து கொண்டிருக்கிறது. அது தொடர்ந்து அதிகரித்து வரும், அர்ப்பணித்துக் கொண்ட கட்டுப்பாடான தொண்டர் குழுவை உருவாக்கி வருகிறது.

பணம், மனிதர்கள் மற்றும் சூழ்நிலைகளால் ஏற்படும் தடைகள், வாழ்க்கையின் நோக்கத்தை, குறிக்கோளை, ஆதிக்கம் செலுத்த ஏக்நாத்ஜி ஒருபோதும் இடங்கொடுத்ததில்லை. அவர் பணப் பற்றாக்குறையினால் திட்டங்களை மாற்றவோ, சிறிதாக்கவோ இல்லை. விவேகானந்தர் பாறை நினைவாலயக் கமிட்டி கல்சிற்பக் கலைஞர்களுக்கு உணவளிப்பதற்குக்கூட போராடிக் கொண்டிருந்த வேளையில் அவர் வருங்காலச் செயல்திட்டங்களுக்காக நிலம் வாங்கத் திட்டம் தீட்டினார். அவர் பணியாளர்களின் எண்ணிக்கையையோ அல்லது நினைவாலயத்தின் அளவையோ குறைக்கவில்லை. அதேபோல், ஒரு குறிப்பிட்ட பணிக்கு அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் அப்பணியின் தேவைக்குத் தகுந்தாற்போல் தன்னை உயர்த்திக்கொள்ள முடியாமல் போனால், அம்மனிதரின் பொறுப்பை மாற்றுவதற்கு அவர் தயங்கமாட்டார். இயலாத நிலையில் அவர் ஒருபோதும் பணியாற்றியதில்லை. அதேபோல் அனுகூலமற்ற சூழ்நிலையானது எது செய்யப்படவேண்டுமோ அதைச் செய்வதிலிருந்து அவரைத் தடுத்ததில்லை. யாரிடமும் பேசி அந்த நபரை அவருடைய கருத்தை ஏற்றுக் கொள்ளச் செய்து, சூழ்நிலையை லட்சியத்திற்கு சாதகமாக ஆக்கிக் கொள்வதற்கு அவரிடம் திடநம்பிக்கை, செயல்திறன், பொறுமை இருந்தது. அவர்மீது, லட்சியத்தின்மீது அவருக்கிருந்த நம்பிக்கையின் சக்தி வாய்ந்த இணக்கமான வெளிப்பாடே அவருடைய வாழ்க்கை.



SHRI EKNATHJIRANADE
1914-1982

ஒருதடவை ஏக்நாத்ஜிக்கு ஒருவர் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் அவருடைய ஊரில் ஒரு நினைவாலயம் எழுப்ப ஏக்நாத்ஜியின் உதவியை நாடியிருந்தார். ஏக்நாத்ஜி அவருக்கு 18.05.1972 அன்று எழுதிய பதில் கடிதத்திலிருந்து ஏக்நாத்ஜியின் வாழ்க்கையின் சாராம்சத்தை நாம் அறிய முடிகிறது.

மகாத்மாக்களுக்கும், மாதரசிகளுக்கும் நினைவாலயங்கள் கட்டுவதுதான் என் வாழ்க்கையின் முதல் வேலை என்று நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது. நான் விவேகானந்தர் பாறை நினைவாலயப் பணித்திட்டத்தில் நெருக்கமான ஈடுபாடு கொண்டிருப்பதால் உங்களுக்கு இந்த எண்ணம் தோன்றியிருக்கலாம்.

என் வாழ்க்கையின் மையக்கருத்து சனாதன தருமத்தின் உபதேசத்தை ஒவ்வொரு வீட்டுக்கும் கொண்டு செல்வது தான். அதன்மூலம் சுவாமி விவேகானந்தர் போன்ற மாபெரும் ரிஷிகள் கண்டுணர்ந்து உபதேசித்த பணித்திட்டமாகிய நல்ல மனிதர்களை உருவாக்கும் வேலையைப் பெரிய அளவில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

1972 ஆகஸ்ட் 20-ம் நாள் விவேகானந்த கேந்திரப் பத்திரிக்கையின் 'ஹில் இந்தியா' என்ற பொருளைத் தாங்கி வெளிவந்த பத்திரிக்கையை வெளியிடும்போது சுவாமி ரங்கநாதானந்தாஜி இவ்வாறு குறிப்பிட்டார். ஏக்நாத் ரானடே போன்ற ஒரு மனிதர் எந்த நாட்டிலும், எந்த ஒரு இயக்கத்திற்கும் மதிப்புமிக்க சொத்தாகும். நான் அவரை மிக நெருக்கமாக அறிவேன். அவருடைய சக்தியை, அவருடைய முழுமையான அர்ப்பணிப்பை, அமைதியான, ஆரவாரமற்ற குழுப்பணி மற்றும் மனிதர்களையும், அடக்க முடியாத சூழ்நிலையையும் சாதகமாகத் தன்வயப்படுத்தும் அரிய திறமையை, நான் மிகவும் மதிக்கிறேன். பாராட்டுகிறேன். எந்த ஒரு கஷ்டமும் அவருக்கு இடையூறு செய்திட இயலாது. மலை உயரத் தடைகளையும் மனஉறுதியோடு அமைதியாகவும், சாந்தமாகவும் அவர் எதிர்கொள்வார். ஸ்ரீராமகிருஷ்ணரின் பொருள் பொதிந்த சொற்களில் கூறுவதென்றால் 'கச்சா அமி காய்' போன்ற நான் அல்லது அகந்தை 'பக்கா அமி' கனிந்த 'நான்' ஆக மாற்றப்பட்டு விட்டது. இயக்கத்தின் பின்னால் அவரும் அர்ப்பணித்துக்கொண்ட அவர் தோழர்களும் இருப்பதால் மனிதகுலத்திற்கு நன்மை பயக்கும் செழிப்பான அறுவடை தரும் உபயோகமுள்ள பணியை அது எதிர்பார்க்க முடியும், உண்மையிலேயே அவர் ஒரு கர்மயோகி, அவருடைய வாழ்க்கையே கேந்திரப் பிரார்த்தனையின் வர்ணனை.

**மகத்தான பயணம் முடிகிறது:** டாக்டர் ஏக்நாத்ஜியை பணி செய்திட அனுமதித்தாலும் அவர் நிதானமாக செய்யும் இயல்புடையவர் அல்லவே. செய்வதற்குப் பல பணிகள் காத்திருந்தன. அவர் அவசரகதியில் இருந்தார். அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் கால அவகாசம் மிகக்குறுகியது என்பதை அவர் அறிவார். அவர் இவ்வாறு கூறுவதுண்டு. ''நான் பத்து ஆண்டுகள் அல்லது அதற்குப்பிறகு செய்ய வேண்டிய பல பணிகளை நான் இப்போது விவரித்தாக வேண்டும். சிலருக்கு அது அர்த்தமற்றதாகத் தோன்றும். ஆனால் பணி செய்தாக வேண்டும்.'' **அவர் விவேகானந்த கேந்திரம் இண்டர்நேஷனல்** என்ற அமைப்பை உருவாக்கினார். அதற்காக நிலம் வாங்கிடவும், வருங்காலச்

செயல்திட்டங்களை நடத்துவதற்கும் அவர் நன்கொடை திரட்டினார். அவர் 1977-லிருந்து இந்திய அரசின் கலாச்சார உறவுக்கான ஆலோசனைக் குழுவின் ஒரு உறுப்பினராக இருந்தார். உண்மையில், ஏக்நாத்ஜி சுகவீனம் அடையுமுன்பு, அவர் வெளிநாடு செல்வதற்கான சுற்றுப்பயணத் திட்டத்திற்கு கிட்டத்தட்ட இறுதி வடிவம் கொடுத்திருந்தார். ஏகநாத்ஜி பிற நாடுகளில் பணிதொடங்கிட உத்தேசித்திருந்தார். சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகளைக் கொண்ட ''கொழும்பு முதல் அல்மோரா வரை'' என்ற புத்தகம் ஏக்நாத்ஜி மிகவும் விரும்பிய புத்தகங்களுள் ஒன்று. ''நம்முன் உள்ள பணி'' என்ற சொற்பொழிவில் சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

நம்மில் ஒவ்வொருவரும் தக்க தருணம் வந்துவிட்டது என்பதை கவனித்திருக்க வேண்டும். ஒவ்வொன்றும் நன்நிமித்தமாகத் தெரிகிறது. இந்திய வேதாந்தக் கருத்தும், ஆன்மீகக் கருத்தும் மீண்டும் ஒரு தடவை உலகம் முழுக்கச் செல்லவேண்டும், உலகை வெல்லவேண்டும்.

நமது சொந்த நாட்டுக்கு, நாம் மீண்டும் புத்துயிர் ஊட்ட வேண்டும் என்பது மட்டுமல்ல. அது ஒரு சிறிய விஷயமே. நான் ஒரு கற்பனா சக்தி உள்ள மனிதன். இந்து இனம் ஒட்டுமொத்த உலகை வெல்லுவதே எனது எண்ணம்.

பெட்டிச் செய்தி

**ஸ்ரீ ஏக்நாத்ஜி** என்ற இந்த வாழ்க்கை வரலாற்று நூல் புத்தக வடிவில் **விவேகானந்த கேந்திரப் பிரகாசன் டிரஸ்ட், 5, சிங்கராச்சாரி தெரு, சென்னை - 600 005** என்ற முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. விலை ரூ. 70/-

## கேந்திச் செய்திகள்

நெல்லை மாவட்டம் கருவந்தா பாலர் பள்ளியில் மாரி செல்வமும், அண்ணாமலையும் நடத்திய குருபூர்ணிமை விழாவில் பிரம்மச்சாரி பால்துரை, ஆசிரியை சுமதி சிறப்புரை ஆற்றினர்.

கபாலிப்பாறை பாலசேவிகாக்கள் இடைக்கால் சாரதா நடுநிலைப்பள்ளி சமய வகுப்பில் குருபூர்ணிமை விழாவை நடத்தினர். தலைமை ஆசிரியர், கேந்திர சகோதரி சரஸ்வதி புனிதவதி சிறப்புரை ஆற்றினர்.

நெல்லை மாவட்டம் ஆறுமுகம்பட்டியில் சேவிகாக்கள் முத்துச் செல்வியும், லெட்சுமி ரதியும் குழந்தைகளுக்கு குருவின் பெருமை கதைகளைச் சொன்னார்கள். தலைமை ஆசிரியர் சண்முக சுந்தரம் சிறப்புரை ஆற்றினார்.

13/10/2011, சகோதரி நிவேதிதை இறைவனடி சேர்ந்ததன் நூற்றாண்டு அஞ்சலி

# சகோதரி நிவேதிதை

பேராசிரியை திருமதி. ஆர். நாகம் சுப்பிரமணியம்

## சகோதரி நிவேதிதையின் இணையற்ற ஆளுமையின் சிறப்பியல்புகள்

''அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர்
கோயிலாய் அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறாய் எனதுயர் நா
டாம் பயிர்க்கு மழையாய் இங்குப்
பொருளுக்கு வழியறியா வறிஞர்க்குப்
பெரும் பொருளாய் புன்மைத்தாதச்
சுருளுக்கு நெருப்பாகி விளங்கியதாய்
நிவேதிதையைத் தொழுது நிற்பேன்''

இது சகோதரி நிவேதிதையைப் பற்றிய, மகாகவி பாரதியின் கூற்று. சுவாமி விவேகானந்தரின் ஞானத்தால் ஈர்க்கப்பட்டு, இந்தியா வந்து, இந்தியாவிற்கே தன்னை அர்ப்பணித்த தியாகச் சுடர் சகோதரி நிவேதிதை. கி.பி. 1895-இல் முதன்முறையாக சுவாமி விவேகானந்தரைச் சந்தித்த மார்கரெட் நோபிள் அவரது சொற்பொழிவுகளைத் தவறாது செவிமடுத்தார். அவரது சொற்பொழிவுகளின் தாக்கத்தினால் மார்கரெட் தனக்கு வழிகாட்டவல்ல தலைவரையும், தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டிய களத்தையும் இனம் கண்டு கொண்டார். இந்த இனம் காணலுக்கும், அர்ப்பணிப்புக்கும், ஒரு ஆண்டிற்கும் குறைவான கால அவகாசமே அவருக்குத் தேவைப்பட்டது.



பாதிரியின் மகள் மார்க்கரெட்

இத்தனை குறுகிய காலத்தில் ஒரு திருப்புமுனை நிகழ்வதற்குக் காரணம் அவரது ஆளுமையில் உறைந்திருந்த, உள்ளார்ந்த பல சிறப்பியல்புகளே. நிவேதிதை பிறந்த அன்றே அவரது அன்னை ''இக்குழந்தையைக், கடவுள் நான் அளிக்கும் காணிக்கையாக ஏற்றுக்

கொள்வாராக'' என வேண்டினார். இவ்வேண்டுதல் பலித்தது போலவே நிவேதிதையின் வாழ்க்கை அமைந்தது.

கி.பி. 1867-ல் அயர்லாந்தியப் பெற்றோரின் மகளாகப் பிறந்து, தனது பதினேழாவது வயதிலேயே ஆசிரியப் பணி ஏற்று, பல்வேறு பெண்கள் பள்ளிகளில் பணிபுரிந்த அனுபவம் பெற்றவர் நிவேதிதை. தமது 25-ஆவது வயதிலேயே தாமே ஒரு பள்ளியைத் தொடங்கினார் நிவேதிதை. கெஸ்விக், ரக்பி, விம்பிள்டன் போன்ற நகரங்களில் கல்விப்பணி ஆற்றிய அக்காலக் கட்டத்திலேயே சமூகப்பணி, இலக்கியம், சேரிவாழ் மக்களுக்கான தொண்டு, பல்வேறு அறப்பணிகள், பத்திரிக்கைகளில் எழுத்துப் பணி எனப் பல்துறை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார் நிவேதிதை. அறிவியலும், அரசியலும், அவருக்கு ஈடுபாடுடைய துறைகளாய் விளங்கின. பழமைவாதக் கிறிஸ்தவக் கோட்பாடுகளினின்றும் விலகி, அறிவார்ந்த கல்விக் கோட்பாடுகளும், கலை, இலக்கிய, அரசியல், சமூக நல ஈடுபாடுகளும், அறிவியல் ஆராய்ச்சியில் நாட்டமும் கொண்டிருந்த நிவேதிதை 'ஸெஸாம் கிளப்' என்றதொரு சிந்தனையாளர் வட்டத்தையும் நிறுவினார். ஜார்ஜ் பெர்னார்ட்ஷா, டபிள்யூ பி. யேட்ஸ், டி.எச். ஹக்ஸ்லி, க்ரோப்டோகின் போன்ற மிகப்பெரும் ஆழ்ந்த சிந்தனையாளர்களோடும் அவருக்கு நெருங்கிய பழக்கம் இருந்தது. இச்சிந்தனையாளர்களே கூட நிவேதிதையின் பன்முக ஈடுபாடுகளையும், ஆற்றல்களையும் வியந்து ''ஒரு பத்திரிக்கையாளராக, கல்வியாளராக, சொற்பொழிவாளராக, எவ்வகை அடிமைத்தளையையும் பொறுக்காது எல்லாவகை விடுதலைகளுக்காகவும் போராடும் போராளியாக நிலைத்து நிற்கும் பெண்'' எனப் புகழ்ந்துள்ளனர்.

இவ்வாறு பன்முக ஆற்றல்களும், ஆர்வங்களும் துடிப்பும் கொண்டிருந்த நிவேதிதைக்கு ஆழ்ந்த நெருடல் ஒன்று உள்ளத்தில் உறுத்திய வண்ணம் இருந்தது. சமயம் குறித்த விஷயங்கள் தடுமாற்றங்களும், ஐய வினாக்கள் நிறைந்தனவாகவும் இருந்தன. இத்தடுமாற்றங்களும், வினாக்களும் ஏற்படுத்திய மனச்சோர்வு உள்ளத்தை ஆட்கொண்டிருந்த பொழுது சகோதரி நிவேதிதைக்குச் சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகளைக் கேட்கும் வாய்ப்புக் கிட்டியது. அவரது சொற்பொழிவுகள் ''தாகத்தால் மடிந்து கொண்டிருக்கும் மனிதர்களுக்குக் கிடைத்த உயிரூட்டும் நீராய் அமைந்தது'' என்பது சகோதரி நிவேதிதையின் வாக்கு.

ஜூலை 1897-இல் சுவாமி நிவேதிதைக்கு எழுதிய கடிதத்தில் நிவேதிதையின் ஒப்பரிய பண்பு நலன்களைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார். இந்தியர்களுக்காகக் குறிப்பாக இந்தியப் பெண்களுக்காகத் தொண்டாற்றத் தேவை ஒரு ஆண்மகன் அல்ல, ஒரு பெண்மணி. ஒரு உண்மையான பெண்சிங்கம். உனது கல்வி, நேர்மை, தூய்மை, அளப்பரிய அன்பு, உறுதி முதலிய பண்புகள், இவை அனைத்திற்கும் மேலாக உனது செல்டிக் ரத்தம் உன்னை மிகவும் தேவைப்படுகிற பெண்ணாக ஆக்கியுள்ளன.

நிவேதிதையின் நிகரற்ற சிறப்பியல்புகளையும், பன்முக ஆற்றல்களையும் வியந்து பாராட்டிய இந்தியச் சான்றோர்கள் மிகப் பலருள் ஒருவர் திரு. கோகலே அவர்கள். நிவேதிதையின் விழுமிய அறிவாற்றலும், கவித்துவ வெளிப்பாட்டுத் திறனும், கடின உழைப்பும், நம்பிக்கைகளை இறுகப் பற்றிக் கொள்ளும் தீவிரமும் திரு. கோகலே அவர்களை வியக்க வைத்தன. உயர்ந்த இப்பண்புகளுக்கெல்லாம் மேம்பட்டு நிவேதிதைக்கு அளிக்கப்பட்டிருந்த மிகப்பெரிய பரிசு விஷயங்களின் ஆன்மாவிற்குள் நேரடியாகப் புகவல்ல ஆற்றல், இப்பேராற்றலைக் கண்டு வியந்த கோகலே எக்காலத்திலும், எந்த நாட்டிலும் மிகச்சிறந்த பெருமைமிக்க பெண் இவரே என ஏற்றுக் கொள்ளப்படுவார் எனக் கூறியுள்ளார்.

இந்தியாவின் மீது நிவேதிதை கொண்டிருந்த கட்டுக்கடங்காது நிரம்பி வழிந்த பற்றும் இந்தியாவின் நலன்களின் மீது அவர் கொண்டிருந்த தீவிர உணர்வு பூர்வமான ஈடுபாடும், இந்தியத் தொண்டுக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த பாங்கும் தியாகமும், தொண்டும் உயிர் மூச்சாய் வாழ்ந்த தேசியத் தலைவர்களைக் கூட வியக்க வைத்தது.

அயர்லாந்தின் புரட்சி இயக்கமான ஸெய்ன் ஃபின் இயக்கத்தில் ஈடுபட்டிருந்தவர் நிவேதிதையின் தந்தை. சுவாமி விவேகானந்தரைச் சந்திப்பதற்கு முன்பே புரட்சி இயக்கங்களில் ஈடுபாடும் சமூகச் சிந்தனையாளர்களோடு தொடர்பும் கொண்டிருந்தார் நிவேதிதை. புரட்சிகர அரசியல் இயக்கங்களோடு தொடர்பு, கல்விப் பணியில் ஈடுபாடு, கவித்துவ எழுத்தாற்றல், சமூக மாற்றங்களில் ஆர்வம், எனப் பல்வகை ஆர்வங்கள் கொண்டிருந்த நிவேதிதையின் ஆன்மீகத் தேடல், அவரை சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகளுக்கு அழைத்து வந்தது. மார்கரெட் நோபிளாய் இருந்து நிவேதிதையாய் மாறிய இந்த ஆங்கிலேயப் பெண்மணியை 'இந்தியா உரிமை கொண்டாடும்' என்ற உண்மையை நிவேதிதை சிறுமியாக இருக்கும் பொழுதே உணர்ந்து கூறினார், நிவேதிதையின் தந்தையின் இந்திய நண்பர் ஒருவர் நிவேதிதையின் தந்தை ஸாமுவேல் நோபிள் ஒரு புரட்சியாளர். பின்னர் சமயப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். இவரது ஒரு இந்திய நண்பர் சிறுமி மார்கரெட்டின் முகத்தில் ஒளிர்ந்த ஆன்மீக ஆர்வத்தைக் கண்டு வியந்து 'ஒருநாள் இவள்மீது இந்தியா உரிமை கொண்டாடும்' என்று கூறி ஆசீர்வதித்தார். நிவேதிதையின் தந்தைக்கும் அவள் பத்து வயதிற்குட்பட்ட சிறுமியாய் இருக்கும் பொழுதே அவளிடம் ஒளிர்ந்த ஆன்மீகச் சுடர் பற்றிய சரியான கணிப்பு இருந்தது. இறப்பதற்குச் சிறிது காலம் முன்பு மார்கரெட்டின் அன்னையிடம், அவரது தந்தை கீழ்வருமாறு கூறினார். ''இவளுக்கு ஒருநாள் விழுமிய பேரழைப்பு ஒன்று வரும்; அப்பொழுது நீ அவள் பக்கத் துணையாய் நிற்க வேண்டும். கடவுள் அவளை அழைக்கும் பொழுது நீ அவளைப் போகவிடு. அவள் தன் சிறகுகளை விரித்துப் பெரும் சாதனைகளைப் புரிவாள்.'

அரசியலும், ஆன்மீகமும் இழையோடிய குடும்பப் பின்புலமும், ஆழ்ந்த, அகன்ற அறிவாற்றலும், பல்துறை ஈடுபாடுகளும், அனுபவமும் கொண்டிருந்த

நிவேதிதையை அவளது ஆளுமையில் உறைந்திருந்த ஆன்மீகத் தாகமும், அவளை இயக்கிய ஞானத்தேடலும் சுவாமி விவேகானந்தரிடம் சென்று சேர்த்தன.

கையில் வாளுடன் மிளிரும் ஒரு விடுதலைப் போராட்ட வீரராக நான் அவளை எப்பொழுதும் நினைவு கூர்கிறேன் என்றார் ஹெச்–டபிள்யூ நெவின்சன் என்ற அறிஞர். கவி இரவீந்திரநாத தாகூர் நிவேதிதையை 'லோக மாதா' என்றார். ஸ்ரீஅரவிந்தர் அவளை 'நெருப்புச் சுடர்' என்றார். நிவேதிதையின் ஆளுமையின் அனைத்துப் பரிமாணங்களையும், அப்பரிமாணங்களின் இசைவுறு இயக்கத்தையும் சுவாமி விவேகானந்தர் நிவேதிதைக்கு அளித்த ஆசியைத் தாங்கிய கீழ்க்கண்ட வரிகள் துல்லியமாய்ப் புலப்படுத்துகின்றன.

''அன்னையின் உள்ளமும், வீரனின் உறுதியும்
தென்றல் காற்றின் இனிமையும்
ஆரிய யாக பீடங்களில் தடையின்றி ஒளிரும் ஜ்வாலையின்
தெய்வீக அழகும், பலமும்
தொன்று தொட்டே வாழ்ந்த எந்த ஆன்மாவு ம்
கனவு கூடக் காண இயலா இன்னும் பல
மேன்மைகளும் நின்னுடையவை ஆகட்டும்.
வருங்கால இந்தியாவின் மகளாய், அன்னையாய்
பணிப்பெண்ணாய்த் தோழியாய்த் திகழ்வாயாக.''

---


*With Best Compliments from*

**S.CHANDRASEKAR**

**UNISCAFF ENGINEERS**

(Designer / Manufacturer of Centering, Shuttering & Scaffolding Systems)

**No.35, Gangai Amman Koil Street, (Opp. to Padmaram Mahal) Vadapalani, Chennai - 600 026.**

E-mail : uniscaff@uniscaff.com Web Site www.uniscaff.com

**Phone / Fax : 2483 9061 / 2483 5560**
**Cell : 94440 25297**

# அலையும் துறவி
## ஆர்.சி. தாணு

வீதியெங்கும்
வித்தகரின்
வாசகங்கள்.
அதுவரை
சுவாமிஜியை
அறிந்தவர் யாருமில்லை!
அதன் பின்
அறிந்திரார் யாருமில்லை!
கூடிய சபையின்
கூடுதல் நிமிடங்கள்
குணவானுக்காய்
தாரை வார்க்கப்பட்டன.
சுவாமிஜி
இல்லையேல்
அரங்கத்தில்
ஆட்கள் அல்லை.
இகழப்பட்ட
இந்தியக் கொடி
இனிதாய்
பட்டொளி வீசி
பறக்க புறப்பட்டது.
தலை விரித்தாடிய
மதவெறி
தலை கவிழப்
புறப்–பட்டது.
உள்ளூரில்
உட்பகை
கொண்டவர்கள்கூட
உள்ளூர
சுவாமியின் உரைகளை
உளமாற
ஏற்றனர்.
டெட்ராய்ட் பாதிரிகள்
சுவாமியை
துவம்சம் செய்யும்
முன் மாதிரிகள்
ஆயினர்.
விருந்தொன்று
நடத்தி, சுவாமி
அருந்துவதில்
மருந்தொன்று
கலந்தனர்.
அருந்தும் வேளை
பானகத்தின் மேல்
இருந்தது
குருவின் அம்சம்.
அருந்த மறுத்தவர்
எழுந்து சென்றார்.
வீழ்ந்திட முயன்றவர்கள்
வீழ்ந்து போயினர்.
தாழ்ந்திட துணிந்தவர்கள்
தகர்ந்து போயினர்.
வான் உயர்
மனம் பெறு
ஜான் பி. லயன்
அன்னார் வீட்டில்
ஓரிரவு அமர்வு
செல்வச் செழிப்பில்
படுக்கை அறை.
பஞ்சு மெத்தையும்
பட்டு துணிகளும்.
அனைத்தும்
இருந்தது
தூக்கத்தை தவிர.
இந்திய ஏழைகளின்
பந்திப் போராட்டம் சுவாமியைக்
கண்ணீர்
சிந்த வைத்தது.

2009 - 2010-க்கான கல்லூரி ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ஆக்கம், ஆங்கில மூலம்

**திருமதி ஏ. டார்சிஸ், தாவரவியல் துறைத்தலைவர், சீதாலட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர்,**
தமிழாக்கமும், சுருக்கமும் திருமதி செ. கலைச்செல்வா

# புவி வெப்பமயமாதலின் விளைவுகளும்; கட்டுப்படுத்தும் முறைகளும்

**காடுகளை அழிப்பதால் ஏற்படும் வெப்பம்:** புவியில் கார்பன் சுழற்சியில் மரங்கள் தனித்துவமாகச் செயல்படுகின்றன. இயற்கையிலேயே காற்றிலிருந்து கார்பன்டை ஆக்ஸைடு வாயுவை நீக்கும் தன்மை பெற்றவை மரங்களே. விளைநிலத்திலுள்ள பயிர்களை விட, காடுகளிலிருக்கும் மரங்கள் பத்து மடங்கு கார்பன்டை ஆக்ஸைடு வாயுவை எடுத்துக் கொள்ளும் தன்மை உடையவையாகும். மரங்களே தம்முள் இவ்வாயுவைத் தேக்கி வைத்துக் கொள்ளும் தன்மையுடையவை. ஒரு மரமானது ஒரு வருட காலத்தில் 13 பவுண்டுகள் அளவுடைய கார்பன்டை ஆக்ஸைடு வாயுவை உறிஞ்சிக் கொள்கிறது மற்றும் ஒரு ஏக்கர் அளவில் அமைந்துள்ள காடுகள் 2.8 டன்கள் வாயுவை உறிஞ்சிக் கொள்கின்றன. மரங்களை எரிப்பதனால் அதில் அடங்கியுள்ள கார்பன்டை ஆக்ஸைடு வாயுவானது வளிமண்டலத்தில் வெளிவிடப்படுகிறது. உலகக் காடுகளின் அளவு சுருங்குவதால் மனிதச் செயல்பாடுகளினால் வெளிவிடப்படுகின்ற இவ்வாயுவானது மரங்களால் உறிஞ்சப்படுவது குறைந்து விடுகிறது. ஒவ்வொரு நாளும் 5500 ஏக்கர்கள் மழைக்காடுகள் அழிக்கப்படுகின்றன மற்றும் 50 மில்லியன் ஏக்கர்களுக்கும் மேலான காடுகள் ஒவ்வொரு வருடமும் அழிக்கப்படுகின்றன. புவியிலுள்ள கார்பன்டைஆக்ஸைடு வாயுவின் அளவு ஒவ்வொரு வருடமும் 0.4% அதிகரிக்கிறது. இந்தக் கோளில் கடந்த மில்லியன் ஆண்டுகளாக இப்படி ஒரு அதிகரிப்பு ஏற்பட்டது கிடையாது.

**ஓசோன் குறைவிற்கான காரணங்கள்:** அண்டார்டிக் ஸ்ட்ரேட் ரோஸ்பியர் பரப்பளவிற்கு அண்டார்டிக் ஓசோன் துளை உருவாகியுள்ளதற்கான காரணம் தற்போதைய ஓசோன் மட்டமானது 1975 மதிப்பீட்டை விட 33% சதவிகிதமாகக் குறைந்ததே ஆகும். அந்த ஓசோன் துளையானது அண்டார்டிக் வசந்த காலத்தின் போது (அதாவது செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் முன்பாதி வரை) மேல்காற்றானது இக்கண்டத்தைச் சுற்றிச் சுழன்று வீசி, அழுத்தக் கலனை உருவாக்கும் போது ஏற்படுகிறது. இந்தத் துருவக் காற்றுச் சூழலுக்குள் கீழப்பகுதியிலுள்ள 50% க்கும் மேற்பட்ட ஸ்ட்ரேட்டோஸ்பெரிக் ஓசோனானது அண்டார்டிக் வசந்த காலத்தின்போது அழிக்கப்படுகிறது. மேற்கண்ட விளக்கங்களின்படி ஓசோன் குறைவிற்கு முதன்மைக் காரணமாக அமைவது,

குளோரினைக் கொண்டுள்ள வாயுக்களாகும் (குளோரோ ஃப்ளூரோ கார்பன்களும், ஹேலோ கார்பன்களும்) புற ஊதாக் கதிர்களின் முன்னிலையில் இந்த வாயுக்கள் பிரிந்து குளோரின் அணுவை வெளியிட்டு அதன்மூலமாக ஓசோன் குறைவைத் துரிதமாக்குகிறது. இவை வாயுநிலையில் நடைபெற்றாலும் கூட துருவ ஸ்ட்ரேட்டோஸ்பெரிக் மேகங்களின் முன்னிலையில்தான் தெளிவாக நடைபெறுகிறது.

இந்தத் துருவ ஸ்ட்ரேட்டோஸ்பெரிக் மேகங்கள் குளிர்காலத்தில் மிகுந்த குளிர்வு இருக்கும் போதே உருவாகிறது. துருவப்பகுதியானது குளிர்காலங்களில் மிகவும் இருள் சூழ்ந்து, மூன்று மாதங்களுக்கு சூரிய ஒளியின்றிக் காணப்படும். சூரிய ஒளிக்குறைவின் காரணமாக வெப்பநிலை குறைகிறது, துருவச் சுழல் காற்று வீசுகிறது மற்றும் காற்று குளிர்விக்கப்படுகிறது. வெப்பநிலை ஏறத்தாழ 80 டிகிரி செல்சியஸ் இக்குறைவான வெப்பநிலைகளில் மேகங்கள் நைட்ரிக் அமிலம் அல்லது பனிக்கட்டி இரண்டாம் வகை பாலிசி) இவ்விரு வகைகளும் வேதி வினைகளை நடைபெறச் செய்து ஓசோன் அழிவை உருவாக்குகிறது.

இதில் ஏற்படும் ஒளி வேதிவினைகள் சிக்கலானவை. ஆனால் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியவை. ஸ்ட்ரோட்டோஸ்பியரில் காணப்படுகின்ற குளோரின் முதலில் நிலைப்புத்தன்மை உடையதாக ஹைட்ரோகுளோரிக் அமிலத்திலும் (ஹெச்.சி.எல்) குளோரின் நைட்ரேட்டிலும் (ஸி.எல்.ஓ.என்.ஓ.டூ) காணப்படுகிறது. அண்டார்க்டிக் குளிர்காலத்திலும், வசந்தகாலத்திலும் பரப்பில் காணப்படுகின்ற துருவ ஸ்ட்ரேட்டோஸ்பெரிக் மேகத்துகள்கள் நிலைப்புத் தன்மையுடைய (ஹெச்.சி.எல்) (ஸி.எல்.ஓ.என்.ஓ.டூ) உடன் வினைபுரிந்த வினைத்திறன் மிக்க சி.எல் மற்றும் சி.எல்.ஓ–வாக மாற்றப்படுகின்றன. அந்த மேகங்கள் வளிமண்டல என்.ஓ.டூ–வையும் நைட்ரிக் அமிலமாக மாற்றுகிறது. இது புதிதாக உருவான சி.எல்.ஓ–வை சி.எல்.ஓ.என்.ஓ.டூ–வாக மாற்றுவதைத் தவிர்க்கிறது.

பெரும்பான்மையான ஓசோன் கீழடுக்கு ஸ்ட்ரேட்டோஸ்பியரில் அழிக்கப்படுகிறது. இதற்கு மாறாக மிகக்குறைந்த அளவு ஓசோன் அழிவே மேலடுக்கு ஸ்ட்ரேட்டோஸ்பியரில் நடைபெறுகிறது. வசந்த காலத்தின் இறுதியில் ஏற்படுகின்ற வெப்பமானது சுழற்காற்றை நிறுத்துகிறது. இது நடப்பது டிசம்பர் மாதத்தின் மத்திய காலத்தில்.

வெப்பத்தினால் ஓசோன் நிறைந்த காற்று பூமத்திய ரேகைப் பகுதியினின்று வீசுவதன் காரணமாக பி.எஸ்.சி–க்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு, ஓசோன் குறைவானது தடுக்கப்பட்டு, ஓசோன் ஓட்டை அடைக்கப்படுகிறது.

# நோயில்லா வாழ்வில் உடலில் இயற்கை வேகங்களின் பங்கு

டாக்டர் வே. கணபதி எம்.டி – சித்தா

**வாந்தியை ஏற்படுத்தும் முறை:**

பேதி உண்டாகுவதற்கு மருந்து உட்கொள்வது போன்றே வாந்திக்கும் மருந்து உட்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. நமது சித்த பாரம்பரிய நூலில் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வாந்தி செய்விக்க மருத்துவம் அறிவுறுத்தப்படுகிறது. உடல்நிலை அறிந்து, வாந்தி செய்விக்க அநேக வீட்டு மருந்துகள், இல்லக் குறிப்புக்கள் கூறப்பட்டுள்ளன. சிறு குழந்தைகள் முதல் யாவரும் வாந்திக்கு மருத்துவம் செய்யலாம். 1) காலையில் உத்தமம். 2) முந்திய நாள் இரவு இலகுவான உணவு உண்டு நன்கு தூங்கி அடுத்த நாள் மேற் கொள்ள வேண்டும். 3) மூன்று முதல் நான்கு தடவை வாந்தி போதுமானது. 4) இலகுவான ஆடை அணிந்து, பேசுவதை நிறுத்தி மனநிலை சிதறாமல் இருக்க வேண்டும். 5) வாந்தி நின்றவுடன், இலகு பழச்சாறு வகைகளோ (அ) கற்கண்டு கலந்த பானமோ பருகி, சிறிது நேரம் கழித்து நன்கு குளித்து விட வேண்டும். 6) அன்றையத் தினம் கடுமையாக வெயிலில் செல்வதைத் தவிர்க்க. அசைவ மற்றும் கொழுப்பு உணவு வகைகளை தவிர்க்க இரவு விழிப்பும் தவிர்க்க. 7) வாந்தி ஏற்படும் போது மூக்கு வழியாகவும் நீர்மம் பொங்கி வெளியாகும். கவனமாக சுத்தம் செய்தல் வேண்டும். எண்ணெய் குளியல் செய்யும் போது மேற்கொள்ளப்படும் பத்தியம் பின்பற்றப்பட வேண்டும். மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள சித்த, ஆயுர்வேத மருத்துவர்களைக் கலந்து ஆலோசிக்கலாம்.

**எந்தெந்த நோய்களுக்கு வாந்தியை உண்டாக்கலாம்:**

1) கபநோயால் பாதிக்கப்பட்ட கபவாத சுரம், இரைப்பு எனும் ஆஸ்த்மா நோய் உள்ளவர்கள் 2) குன்ம நோய் எனும் வயிறு–குடல் உறுப்பு நோய் பாதிக்கப்பட்டவர்கள் 3) விடப்பொருட்கள் உண்டவர்கள் மேற்கூறியோர்களுக்கு முக்கியமாக வாந்தியை உண்டாக்குவது அறிவுறுத்தப்படுகிறது.

**யார் யாருக்கு வாந்தி உண்டாக்கக் கூடாது?**

1) கருவுற்றவர்கள் 2) இரத்த வாந்தி செய்பவர்கள் 3) குடல் அடி தள்ளல் உள்ளவர்கள் 4) தீவிர வயிற்றுப் புண் உள்ளவர்கள் ஆகியோருக்கு வாந்தி உண்டாக்க மருத்துவம் செய்தல் கூடாது.

**வாந்தியைத் தடுத்து அடக்கும் போது ஏற்படும் குறிகுணங்கள்:**

வாந்தி உண்டாகுவதைத் தடுத்து நிறுத்துதல் மிகவும் அரிதானச் செயலாகும். அங்ஙனம் பலவந்தமாக வாந்தி உண்டாகுவதை மாத்திரைகளால்

(அ) பிற முறைகளால் வர விடாமல் தடுக்கும் போது கீழ்க்கண்டப் பல பிணிகள் உடலில் உண்டாக காரணமாகி விடும்.

1) தோல் நோய்கள், (ஊறல், தடுப்பு, காந்தல்) 2) கண் நோய்கள் 3) பாண்டு எனும் வெளுப்பு நோய் 4) பித்த நீர் மாற்றங்கள் 5) இரைப்பு இருமல் எனும் ஆஸ்த்மா 6) காய்ச்சல் 7) இருமல் 8) தலைக்கனம் 9) அசீரணம் 10) தூக்கமின்மை 11) மன அழுத்த நோய் முதலிய பல நோய்கள் உண்டாக வழி உண்டாகும்.

வாந்தியால் பித்தந் தாழும் என்பதை மறக்கக் கூடாது. நச்சுக்கடியால் உண்டாகும் நஞ்சை நீக்கவும் விடப்பொருட்களை உண்டாலும் ஏற்படும் நச்சுத்தன்மை நீக்கவும் உடனடியாக அறிவுறுத்தப்படும் வாந்தியானது, தொடர்ந்து அடுத்தடுத்து வாந்தி உண்டாகி அபாய நிலைக்குக் கூடக் காரணமாகிவிடும். மிகுந்த சிரமத்துடன் வாந்தி உண்டாகும்போது பேதியும் உண்டாகக்கூடும். தற்காலத்தில் வாந்திக்கும் – பேதிக்கும் சேர்ந்து மருந்தும் வழங்கப்படுகிறது. உடலிலுள்ள சமானாக்கனி எனும் அக்கினியானது சிதறுண்டு, பித்தத்துடனோ, கபத்துடனோ மாறுபட்டு அவ்விடத்திலுள்ள மேல் நோக்கு வாயு எனும் உதான வாயுவால் தூண்டப்பட்டு உண்டாகும். வாந்தியை பற்றி நவீன மருத்துவம் கூறும் சில கருத்துக்களையும், எளிய முறையில் வாந்தி உண்டாக்கும் மருந்துக்களையும் பிறகு காண்போம்.

## கேந்திரச் செய்திகள்

நெல்லை மாவட்டம் துரைச்சாமிபுரத்தில் பாலசேவிகாக்கள் மகேஸ்வரியும், கலாஜோதியும் உள்ளூர் பள்ளி ஆசிரியை ஜெய்சியும் குருபூர்ணிமை விழாவை குழந்தைகளுக்கு புரியும் வண்ணம் நடத்தினார்கள். விசுவநாதபேரியில் ற்றி. முனீஸ்வரி நடத்திய குரு பூர்ணிமா விழாவில் ஆசிரியை உமாராணி அருணோதயா நடுநிலைப்பள்ளி ஆசிரியர்கள் வியாச பகவானையும், கிருஷ்ணரையும் போற்றினர். சிறப்புரை ஆசிரியர் முத்துகுமார்.

குமரி மாவட்டம் ஏழு காப்பகங்களில் கேந்திரத் தொண்டர் சி. லீலாவின் வழிகாட்டலில் குருபூர்ணிமை அழகாகக் கொண்டாடப்பட்டது. கேந்திர அன்பர் திரு. ராமலிங்கம் ஆசாரி அவர்களின் நினைவு நாளை ஒட்டி 15 பாலர் பள்ளிகளில் 331 குழந்தைகளுக்கு பாயசமும், அப்பளமும் வழங்கப்பட்டன.

நெல்லை மாவட்டம் ரெட்டியார்பட்டி காப்பகத்தில் கே. அனுஷாவும், எம். விமலாவும் குருபூர்ணிமையை அழகாகக் கொண்டாடினர். 50 பெற்றோர்கள் வந்திருந்தனர். இசக்கித்தாய் ஏ.எஸ். முருகன் விருந்தினர் உரையாற்றினர்.

நெல்லை மாவட்டம் இளையார்குளம் காப்பகத்தில் தெய்வ செல்வியும், இந்திராவும் குருபூர்ணிமை விழாவை ஏன் கொண்டாட வேண்டும் என்பதை குழந்தைகளுக்கு எடுத்துக் கூறினர்.

## விவேகானந்த கேந்திரம் – கன்னியாகுமரி

**கிராம முன்னேற்றத் திட்ட நிர்வாக அலுவலகம்**

**7–பி, சிவந்தாகுளம் முதல்தெரு, தூத்துக்குடி – 628 003**

**தொலைபேசி: 0461 – 2376666, ஈ.மெயில்:** rdp@vkendra.org

# ஆசிரியர்களுக்கான கட்டுரைப்போட்டி – 2011

அன்புள்ள ஆசிரியப் பெருமக்களுக்கு, நமஸ்காரங்கள்.

விவேகானந்த கேந்திர கிராம முன்னேற்றத் திட்டத்தின் பணிகளில் கல்லூரி, பள்ளி ஆசிரியர்கள் பேருற்சாகம் காட்டி வருகின்றனர். பண்பாட்டுப் போட்டிகள், கல்லூரி மாணவர்கள் தேர்வுகள் ஆகியவற்றில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் ஆசிரிய பெருமக்களின் பணி போற்றுதற்குரியது. அவர்கள் கேந்திரத்தோடு இன்னும் நெருங்கிய உறவாடச் செய்வதற்காக அவர்களுக்காக சிறப்பு நிழ்ச்சிகளை கேந்திரம் நடத்த வேண்டும் என்ற ஆவலை அவர்களே வெளியிட்டார்கள். அதன்படி சமுதாயம், விஞ்ஞானம், நீதி நெறி சார்ந்த தெய்வச் சிந்தனை அவற்றைப் பற்றிய கட்டுரைத் தலைப்புகளை சுழற்சி முறையில் ஆசிரியர்களுக்குக் கொடுத்து கட்டுரை எழுதச் செய்கிறோம்.

சிறப்பான ஆக்கங்கள் பரிசு பெறுவதோடு கேந்திரப் பத்திரிக்கையான விவேகவாணியில் தொடராக வந்தும், நூல் வடிவம் பெற்றும் பாராட்டுகளுக்கு உரியதாயிருக்கின்றன. அத்தொடரில் இவ்வாண்டு

**“அறத்தையும், தெய்வ பக்தியையும் வளர்ப்பதில் தமிழ் முனிவர்களின் பங்கு”**

என்ற தலைப்பை ஆசிரியர்கள் முன்வைக்கிறோம். சங்ககாலம் முதல் தெய்வத்தமிழை, அறத்தமிழை, போற்றி வளர்த்து சமுதாயத்தைப் பண்படுத்தும் புனிதப் பணியை முனிவர்கள் இடைவிடாமல் செய்து வந்திருக்கின்றனர். அவர்களுடைய பணிகளையும், தாக்கத்தினையும் பற்றிய கட்டுரைகளை வரவேற்கிறோம்.

*இக்கட்டுரையில்* ***தமிழ், தெய்வ பக்தி, அறம்*** *ஆகியவற்றுக்கு ஒன்றுசேர முக்கியத்துவம் கொடுத்த திருவள்ளுவர், தாயுமானவர், பட்டினத்தார், பாரதியார், நாயன்மார்களுள் விருந்தோம்பலைப் போற்றிய இளையாங்குடிமாற நாயனார் போன்ற உதாரணங்களை விளக்க வேண்டும்.*

தங்கள் அனுபவம், அறிவுநூல், அறிவு இவற்றின் அடிப்படையில் தங்கள் பரிந்துரைகள் அமைய வேண்டும். தமிழ் அல்லது ஆங்கிலத்தில் கட்டுரைகள் முப்பது பக்கங்களுக்கு மிகாமல் தெளிவாக எழுதப்பட்டு பள்ளி, கல்லூரி முதல்வரின் அத்தாட்சியுடன் தூத்துக்குடி முகவரிக்கு 30.11.2011–க்கு முன் அனுப்பப்படவேண்டும்.

**செயலாளர்**

விவேகானந்த கேந்திரம் கிராம முன்னேற்றத் திட்டம்.

# சுவாமி விவேகானந்தர் மகாசமாதி தினம்

## மாபெரும் அன்னபூஜை – 04.07.2011

நல்ல மனிதர்களை உருவாக்குதலும் மற்றும் தேசத்தைப் புனரமைத்தலும் என்பதை லட்சியமாகக் கொண்டு செயலாற்றி வரும் விவேகானந்த கேந்திரம் பாரத நாடெங்கும் பல்வேறு ஆக்கப்பூர்வமான ஆன்மீக, பண்பாட்டு சேவைப் பணிகளை ஆற்றி வருகிறது.

விவேகானந்த கேந்திர கிராம முன்னேற்றத் திட்டத்தின் சார்பில் சுவாமி விவேகானந்தரின் 109–வது மகா சமாதி தினம் – அன்னபூஜை விழா, விவேகானந்தபுரம் அவைக்கூடத்தில் வைத்து 04.07.2011 அன்று சிறப்பாக நடைபெற்றது.

இந்த அன்னபூஜைக்கு, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்ட அன்பர்களிடம் இருந்து 18,600 கிலோ அரிசி நன்கொடையாக சேகரிக்கப்பட்டது. இந்த அரிசிக் குவியலில் தேவி அன்னபூரணியை அலங்காரம் செய்து இந்த விழா நடைபெற்றது.

இப்கோ நிறுவனத்தின் மூத்த அதிகாரி திரு. ஏ.கே. சிங் அவர்கள் திருவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள். கேந்திர ஆயுட்காலத் தொண்டர் பயிற்சி பெறும் சகோதரிகளால் ஐக்கிய மந்திரம், இறைவணக்கம் பாடப்பட்டது.

விவேகானந்த கேந்திர, கிராம முன்னேற்றத் திட்டச் செயலாளர் திரு. சு. ஐயப்பன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். அதைத்தொடர்ந்து அன்னபூர்ணா ஸ்தோத்திரத்தை சகோதரி ரேகா கிருஷ்ணசாமி அவர்கள் ஓத, அனைவரும் பின் தொடர்ந்து ஓதினர். ஸ்ரீமத் பகவத்கீதையின் விஸ்வரூபதரிசனம் அனைவராலும் இணைந்து ஓதப்பட்டது.

அதன்பின் சுரண்டையைச் சேர்ந்த திருமதி முத்தமிழ் செல்வி மற்றும் தெற்கு அஞ்சுகுடியிருப்பைச் சேர்ந்த திருமதி மதுரம்மாள் ஆகியோரால் மங்கள ஆரத்தி காண்பிக்கப்பட்டது.

பூஜிக்கப்பட்ட அரிசியை செங்கோட்டையைச் சேர்ந்த தொழில் அதிபர் திரு. மோகன்லால் என். படேல் அவர்கள் வழங்க விவேகானந்த கேந்திர உபதலைவர் சகோதரி நிவேதிதா அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

அதன்பின் விவேகானந்த கேந்திர புத்தக வெளியீடு சார்பில், ''அமுதக் குடும்பம்'' என்ற புத்தகத்தை வள்ளியூர் விவேகானந்த கேந்திர வித்யாலயா தாளாளர் திரு. எஸ்.கே. சுப்பிரமணியம் வெளியிட, புல்லுக்காட்டு வலசையைச் சேர்ந்த திரு. ராஜ்குமார் மற்றும் தூத்துக்குடியைச் சேர்ந்த திரு எம். சக்திவேல், காமராசர் கல்லூரி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

அடுத்த கேந்திர வெளியீடான ''இன் கான்வர்சேஷன் வித் சுவாமி விவேகானந்தர்'' என்ற புத்தகத்தை விவேகானந்த கேந்திரப் பொதுச் செயலாளர் திரு. பானுதாஸ் அவர்கள் வெளியிட சங்கரன்கோவில் திரு. சேகர், சுரண்டையைச் சேர்ந்த வரதராஜன், சென்னையைச் சேர்ந்த திரு. செல்வராஜ், மதுரையைச் சேர்ந்த திரு. நாகராஜன், சாம்பவர் வடகரை சுவாமி விவேகானந்தர் மன்றம் திரு. சண்முக செல்வன் ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள்.

அதனைத் தொடர்ந்து விவேகானந்த கேந்திர உபதலைவர் திரு. பாலகிருஷ்ணன்ஜி அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள். அவரது உரையில் கிராம முன்றேற்றத் திட்டப் பணிகள், தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் விரிவடைய வேண்டி வாழ்த்துக் கூறினார்கள்.

அதன்பின் விவேகானந்த கேந்திர மூத்த தொண்டர் திரு. ந. கிருஷ்ணமூர்த்திஜி அவர்கள் வாழ்த்துரையில் செயல்புரியும் சமயம் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் எனவும் கொடுக்கின்ற குணம் இருக்கும் வரை நாட்டின் உற்பத்தித் திறன் உயரும் என்று உரையாற்றினார்கள்.

கேந்திர சகோதரி ஜானகி புஷ்பம் அவர்கள் நன்றியுரை கூறினார்கள். சகோதரி லீலா கேந்திரப் பிரார்த்தனை பாடினார்கள். அனைவருக்கும் அன்னபூஜை பிரசாதம் வழங்கப்பட்டது.

அன்று சமூகத் தொண்டர்களின் கலைநிகழ்ச்சிகள் இரவு 7.00 மணிக்கு நடைபெற்றது.

மகளிர் அணியினர் சகோதரி நிவேதிதா என்ற நாடகத்தையும், ஆண்கள் அணியினர் சுவாமி விவேகானந்தரின் சீடர் அளசிங்கப் பெருமாள் நாடகத்தையும் நடித்துக் காண்பித்தார்கள்.

இவ்வாறு சுவாமி விவேகானந்தரின் மகாசமாதி தினம் மற்றும் அன்னபூஜை நிகழ்ச்சிகள் இனிதே சிறப்புடன் நிறைவு பெற்றன.

## கன்னியாகுமரி விவேகானந்த கேந்திர வித்யாலயா நடத்திய சுதந்திர தின விழா



வந்தே மாதரம் பாடல் நிகழ்ச்சியுடன் தொடங்கிற்று. உறுதி மொழி, கொடி ஏற்றம், மாணவச் செல்வங்களின் உடற்பயிற்சி, தேச பக்தி பாடல், விடுதலை வீரர் பற்றிய உரை, உருளைக்கட்டை பயிற்சி, வீரவாஞ்சிநாதன் நாடகம், ஆகியவற்றால் பொலிவு பெற்று விளங்கிற்று. கேந்திர பொதுச் செயலாளர் திரு. பானுதாஸ், இணைப் பொதுச் செயலாளர் திரு. பிரவீண் தபோல்கர், கேப் பொறியியல் கல்லூரி முதல்வர் டாக்டர் என். அழகேசன் ஆகியோர் கொடி ஏற்றி சிறப்புரை ஆற்றி மாணவர்களைப் பாராட்டி பரிசுகள் வழங்கினர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு முதல்வர் எஸ். ஆபிரகாம்லிங்கன்.

## சுரண்டை சுவாமி விவேகானந்தா அறக்கட்டளையின் கல்வி உதவி வழங்கும் விழா

விவேகானந்த கேந்திரத் தொண்டர்கள், பொறுப்பாளர்களின் ஆலோசனையின் பேரில் சுரண்டை சுவாமி விவேகானந்தர் அறக்கட்டளை சார்பில் நன்கு படித்து வறுமையின் காரணமாக படிப்பைத் தொடர முடியாத ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கும் தொடக்க விழா சுரண்டையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு சுரண்டை சுவாமி விவேகானந்தா நற்பணி மன்றத் தலைவர் திரு. பழனிசாமி அவர்கள் தலைமை தாங்கினார்கள். சுவாமி விவேகானந்தா அறக்கட்டளை இயக்குனர் சகோதரர் முருகேச பாரதி வரவேற்று இத்திட்டம் பற்றி விளக்கிப் பேசினார். விவேகானந்த கிராம முன்னேற்றத் திட்டச் செயலாளர் திரு. சு. ஐயப்பன்ஜி அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். தொடர்ந்து தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் 1) கணேஷ்யா– சேர்ந்தமங்கலம், 2) முத்து சுப்பிரமணியம் – கீழப்பாவூர் 3) வசந்தி – சாம்பவர் வடகரை ஆகிய மூவருக்கும் திரு. பழனிசாமி, திரு. முருகேசபாரதி, திரு. ஐயப்பன்ஜி ஆகியோர் உதவித்தொகை வழங்கி வாழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சியில் விவேகானந்த கேந்திரத் தொண்டர் கருப்பசாமி சமயவகுப்பு அமைப்பாளர் திரு. கண்ணன் மற்றும் சுரண்டை சுவாமி விவேகானந்தா அறக்கட்டளை அன்பர்கள் கலந்து கொண்டனர்.

வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் குருபூர்ணிமா நிகழ்ச்சியை தலைமை ஆசிரியை சுப்புலட்சுமி, கேந்திரத் தொண்டர்கள் சாந்தி, வசந்தி, ஜானகிபுஷ்பம் சிறப்புரை ஆற்றி நடத்தி வைத்தனர். தமிழ் ஆசிரியை செல்வி நன்றி கூறினார்.

தூத்துக்குடி மாவட்டம் இடைச்சிவிளையில் பாலசேவிகாக்கள் நிஷா நந்தினியும், சுதாவும் குருபூர்ணிமை நிகழ்ச்சியை சமய வகுப்பு பாலர் பள்ளி குழந்தைகளிடையே நடத்தினர். நெல்லை மாவட்டம் காவல்கிணறு புதூர் பாலசேவிகாக்கள் சுபாவும், பிரபாவும் குருபூஜை விழாவை நடத்தினர். குழந்தைகளும், பெற்றோர்களும் குருவின் மகிமையை உணர்ந்து மகிழ்ந்தனர்.

நெல்லை மாவட்டம் கலந்தபனை பாலசேவிகாக்கள் விமலாவும், கற்பகமும் நடத்திய குருபூஜை விழாவில் ராமகிருஷ்ணரின் கதை ஏகலைவனின் கதை கூறப்பட்டன.

நெல்லை மாவட்டம் வடலிவிளை பாலர் பள்ளியில் பாலசேவிகாக்கள் ஜெலஸ்டிக் கார்த்திகா, கற்பகம் ஆகியோர் நடத்திய குருபூஜை பொதுமக்களின் ஆதரவைப் பெற்றது. நெல்லை மாவட்டம் அம்பையை அடுத்த புதுகிராமம் பாலசேவிகாக்கள் ராமசாமி கோவிலில் குருபூர்ணிமையைக் கொண்டாடினார்கள். சமயவகுப்பு மாணவிகள், பாலசேவிகாக்கள் சசிகலா, ராஜேஸ்வரி ஆகியோரிடம் இருந்து குரு பக்தர்களின் கதையைக் கேட்டார்கள். பாயசம் குடித்து மகிழ்ந்தார்கள்.

நரையபுரம் பாலர்பள்ளியில் சரண்யாவும், ஜெயந்தியும் நடத்திய குருபூர்ணிமா விழாவில் தலைமை ஆசிரியர் விஜய்சுந்தர் சிறப்புரை ஆற்றினார். குருவின் மகிமை எடுத்துரைக்கப்பட்டது.

நெல்லை மாவட்டம் பண்டாரபுரம் பாலர்பள்ளியில் முத்து லெட்சுமியும், ஜாண்சிராணியும் குருவின் பெருமையை கதைகளுடன் எடுத்து குழந்தைகளுக்கு விளக்கினார்கள்.

தூத்துக்குடி மாவட்டம் தட்டார்மடத்தில் சேவிகாக்கள் அருணாவும், அனிதாவும் நல்ல நல்ல கதைகள் சொல்லி குருவின் பெருமையை குழந்தைகள் மனத்தில் நிலைநிறுத்தினார்கள்.

பாலசேவிகாக்கள் உதயசிந்துஜாவும், பிரம்ம சக்தியும், விஜயஅச்சம்பாட்டில் குருபூர்ணிமை விழாவை சிறப்புற நடத்தினர். எல்லா இடங்களிலும் வியாசரின் பெருமைகளும் குருவின் மகிமையும் எடுத்துச் சொல்லப்பட்டன. அம்பையை அடுத்த அடைச்சாணியில் புனிதவதி நடத்திய குருபூர்ணிமை விழாவில் கேந்திரத் தொண்டர் சி. சரஸ்வதி இடைக்கால் தலைமை ஆசிரியர் ராதா ஆகியோர் சமர்த்த ராமதாசர் கதை, ஏகலைவன் கதை, விவேகானந்தர் கதை ஆகியவற்றை குழந்தைகளுக்குச் சொல்லி குருபக்தியை வளர்த்தனர்.

நெல்லை மாவட்டம் ஆறுமுகம்பட்டி பாலசேவிகாக்கள் நடத்திய பெற்றோர் கூட்டத்தில் பெற்றோர் ஒத்துழைப்பின் முக்கியத்துவம் பற்றி கேந்திரத் தொண்டர் திருமதி சந்திரா உரையாற்றினார்.

தூத்துக்குடி போல்பேட்டை கீதா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் கேந்திர உள்ளூர் தொண்டர்கள் நடத்திய கண் முகாமில் 167 வெளி நோயாளிகள் பயன் பெற்றனர். 37 பேர் அறுவைச் சிகிச்சைக்கு நெல்லை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். டாக்டர் முகைதீன் சிகிச்சை அளித்தார். உள்ளூர் அன்பர்கள் திரு. தாமோதரன், திரு. சங்கரன், செயலாளர் திரு. எஸ். ஐயப்பன், தாளாளர் ஜீவன், கேந்திர அன்பர் பிச்சாண்டி ஆகியோர் உணவு ஏற்பாடும், முகாம் ஏற்பாடும் செய்தார்கள். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பும், தகவலும் கேந்திரத் தொண்டர்கள் திரு. சந்தான கிருஷ்ணன் திரு. நாகசாமி.

இராமநாதபுரம் மாவட்டம் நைனார் கோவில் நாகநாத சுவாமி கோவிலில் கேந்திரம் நடத்திய திருவிளக்குப் பூஜையில் 1040 தாய்மார்கள் கலந்து கொண்டார்கள். திருமதி எஸ். சாரதா, டாக்டர் வரதராஜன், செயலாளர் சு. ஐயப்பன், பேராசிரியர் அழ. அறிவழகன், திரு. என். இந்திரகுமார், கேந்திரத் தொண்டர் ஆர். சுரேஷ் கண்ணன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். முதல் குத்துவிளக்கை திருமதி நிர்மலா அபிஷேகநாதன் ஏற்றினார்.



65 கிராமங்களில் இருந்து வந்திருந்த தாய்மார்கள் ஊர்வலமும் திருவிளக்குப் பூஜையும் சிறப்புற செய்தனர். திருமதி எஸ். செல்வராணியும், திருமதி கலைவாணியும் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். விழா ஒருங்கிணைப்பும் தகவலும் கேந்திரத் தொண்டர் கே. செல்வராஜ்.

கோவில்பட்டியில் தொடர்ந்து எம். உமாபதி – கோவில்பட்டி, எம். ஐயப்பன் – கழுகுமலை, எஸ். சாரதா – சங்கரன்கோவில் ஆகிய மூவருக்கும், அருப்புக் கோட்டையில் ஜி. நாகபிரியா செம்பட்டி, பி. இராமசுப்ரமணியன் மேட்டுக்குண்டு, ஆர். ராகவி – பந்தல்குடி ஆகியோருக்கும் சுவாமி விவேகானந்தர் அக்கட்டளையின் சார்பில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. மூன்று மையங்களிலும் சேர்ந்து ரூபாய் 2,000/- வழங்கப்பட்டுள்ளது. இன்னும் பல இடங்களில் கேந்திரப் பணிகளுடன் தொடர்புடைய ஏழை எளிய மாணவர்களுக்கு உதவி செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள்.



## புத்தாண்டு வாழ்த்து

க்ஷணம் ப்ரதிக்ஷணம், க்ஷணம் ப்ரதிக்ஷணம் என்னவம் நவம்/
தச்ச சுந்தரம் சத்ய தத்சிவம்/
வர்ஷ நூதனம் தே சுபம் முதம்/
உத்தரோத்தரம் பவது சித்திதம் க்ஷணம்//

**புத்தாண்டு வாழ்த்து (மொழி பெயர்ப்பு)**

தங்களுக்கு இந்த புத்தாண்டு ஒவ்வொரு கணமும், மறுகணமும் புத்துணர்ச்சி தருவதாய் புதிதாய் இருக்கட்டும். அழகுடையதாய், உண்மை உள்ளதாய், மங்களங்கள் அனைத்தையும் தருவதாய் இருக்கட்டும். புதிய வருடம் சுபங்களைத் தரட்டும். இனிமையைத் தரட்டும். தொடர்ந்து மேலும் மேலும் வெற்றிகளைத் தரும் நேரத்தைக் கொண்டதாக அமையட்டும்.

## திருமணநாள் வாழ்த்து

விவாஹ தின மிதம் பவது ஹர்ஷதம்/
மங்களம் ததா வாஞ்ச க்ஷேமதம்// (பல்லவி)
ப்ரதிதினம் நவம் ப்ரேம வர்த்ததாம்/
ஷதகுணம் குளம் சதாஹி மோததாம்/
லோக சேவயா தேவ பூஜனம்/
க்ருஹஸ்த ஜீவனம் பவது மோக்ஷதம்//

**திருமணநாள் வாழ்த்து (மொழி பெயர்ப்பு)**

உங்களுடைய இந்த திருமண நாள் ஆனந்தமயமானதாக இருக்கட்டும். மங்களத்தைத் தரட்டும். விரும்பிய நன்மைகளையெல்லாம் தருவதாக அமையட்டும். ஒவ்வொரு நாளும் உங்களிடையே புதுப்புது அன்பு வளரட்டும். உங்கள் குலம் நூறு பங்கு எப்போதும் மகிழ்ச்சி பெருக விளங்கட்டும். சமுதாய சேவை, இறை வழிபாடு இவற்றின் மூலம் இல்லற வாழ்க்கையின் நிறைநிலையான வீடுபேற்றையும் தருவதாக அமையட்டும்.

இப்பக்கத்திற்கான விளம்பர நிதி உதவி
எஞ்ஜினியர் திரு ஜி. மதிவாணன், சென்னை

## விவேகானந்தபுரம், விவேகானந்த கேந்திர வித்யாலயத்தில் விவேகானந்தர் பாறை நினைவு மண்டபத்தை நாட்டிற்கு அர்ப்பணித்த 41-வது ஆண்டு விழாவும், சுவாமி விவேகானந்தர் 1893-ல் சிக்காகோவில் உரையாற்றிய தின விழா பற்றிய நிகழ்ச்சி நிரல்



1) முதலில் விளக்கேற்றுதல் நிகழ்ச்சி திருமதி கே. சசிகலா முதன்மை கல்வி அதிகாரி நாகர்கோவில் கன்னியாகுமரி மாவட்டம் அவர்களால் ஏற்றப்பட்டது.

2) அடுத்து இறைவணக்கம் விவேகானந்த கேந்திர வித்யாலயா மாணவிகள் வந்தே மாதரம் பாடல் பாடினார்கள்.

3) பள்ளியின் முதல்வர் அவர்கள் சிறப்பானதொரு வரவேற்புரை ஆற்றினார்.

4) விவேகானந்த கேந்திரத்தின் பொருளாளர் திரு எம். ஹனுமந்தராவ்ஜி அவர்கள் தலைமை தாங்கினார்.

5) பத்து ஆண்டுகள் பணி நிறைவு முடிந்த கேந்திர ஊழியர்களுக்கு ஊக்கப் பரிசு வழங்கி கௌரவித்து உலக சகோதர தினத்தைப் பற்றி சிறப்புரை ஆற்றினார்கள். தன்னம்பிக்கை பற்றிய சுவாமிஜியின் கருத்தை தெளிவாகப் பேசினார்கள்.

6) பள்ளி மாணவர்கள் குழுப்பாடல் ஒன்றை இனிமையாகப் பாடினார்கள்.

7) சிறப்பு விருந்தினர் திருமதி ற்றி. விஜி, முதல்வர், என்.எம்.எஸ். காமராஜர் கல்வியியல் கல்லூரி அவர்கள் உலகம் முழுவதிலும் தியாகம், சத்தியத்தை உணர்த்தும் விதத்தில் சுவாமிஜியின் பேச்சு பற்றிப் பேசினார்கள். அனைவரும் பரம்பொருளின் படைப்பு என்பதை அனைவரும் உணர வேண்டும். ஒரு செயலைச் செய்ய நினைத்தால் அச்செயலையே சிந்தித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அச்செயலில் ஏற்படும் சோதனைகளையும் சாதனையாக்க முடியும் என்றார் சுவாமிஜி என்ற கருத்துக்களை மிக இனிமையாகப் பேசினார்கள்.

அடுத்து திரு. ஹனுமந்தராவ்ஜி அவர்கள் சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தார்கள்.

திரு. சி. வேலப்பன் பிள்ளை அவர்கள் விழாவினை சிறப்பு செய்த அனைவருக்கும் சிறப்பான நன்றியுரை வழங்கினார்கள்.

கேந்திர பிரார்த்தனை பள்ளி மாணவிகள் பாடினார்கள். விழாவினை மேலும் சிறப்பு செய்யும் விதத்தில் பள்ளி கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. முதலாவதாக,

1) பாரத நாட்டின் பெருங்கலைகளில் ஒன்றான பரதக்கலை பள்ளி மாணவிகளால் அரங்கேற்றப்பட்டது.




2) வீர சிவாஜியின் சிறப்பை நினைவுபடுத்தும் வகையில் தமிழ் பாடல் ஒன்று மாணவிகள் பாடினார்கள்.

3) சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ சொற்பொழிவை மிகவும் சிறப்பாக ஆங்கிலத்தில் எடுத்துரைத்தான் பள்ளி மாணவன்.

4) விவேகானந்தரைப் பற்றிய நாடகம் ஒன்று ஆங்கிலத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. பள்ளி மாணவர்கள் சிறப்பாக நடத்தி காட்டினர்.

5) மீண்டும் பரத நாட்டியப் பாடலுக்கு நாட்டுப்புறக் கலையை நினைவுபடுத்தி நடனமாடினார்கள் பள்ளி மாணவிகள்.

6) சம்ஸ்கிருத மொழியில் மனிதர்களுக்கிடையே உள்ள அன்பை வெளிப்படுத்தும் வகையில் பாடல் ஒன்றை மிக இனிமையாகப் பாடினார்கள் பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள்.

7) உரையாடல் நிகழ்ச்சி விவேகானந்தர் மடத்திற்கு சென்ற துறவிகளுடன் பிற மாநிலங்களைச் சார்ந்த பெண்கள் சுவாமி விகோனந்தரைப் பற்றி ஆற்றிய உரையாடல் பள்ளி மாணவ, மாணவிகள் உரையாடினார்கள்.

8) கோகுலக் கண்ணனின் லீலைகளைப் பற்றிய பாடலுக்கு நடனமாடி நம்மை மகிழ்வித்தார்கள் பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள். விழா இனிதே நிறைவு பெற்றது.

# பன்னிரு திருமுறைகள்

என்.எஸ்.பி

பல்லவர் காலத் தமிழகத்தின் வாழ்க்கைப் பார்வை குறிக்கத்தக்க பெருமாற்றம் கண்டது. இம்மாற்றம் அக்கால இலக்கியத்தின் பொருளிலும் போக்கிலும் மிகத் தெளிவாகவே புலப்படுகின்றது. சமணம், பௌத்தம் என்னும் இரு சமயங்களின் கொள்கைகளையும், சைவம், வைணவம் என்னும் இரு சமயங்களின் கொள்கைகள் வெல்லத் தொடங்கின. இலக்கிய வரலாறு இக்காலத்தைச் **சமய எழுச்சிக் காலம்** எனக் குறிப்பிடுவது வழக்கம்.



சிவநெறிச் செல்வர்கள் தலங்கள் தோறும் சென்று சைவ எழுச்சிக்கு உதவும் அற்புதப் பாடல்களை அருளினர். சைவ அடியவர்கள் சிலர் பாடிய பாடல்களின் தொகுப்பே பன்னிரு திருமுறைகள் எனப் போற்றப் படுகின்றது. சைவ சமயத்தின் அழகிய, ஆற்றலும், ஆன்மீகமும் ததும்பி நிற்குமிடம் இத்திருமுறைகள். இவை பக்தியும், ஞானமும் கமழ ஆன்ம நலம் பெருக்குகின்றன.

இத்தொகுப்பு எழுந்த விதம் பற்றிய சுவையான செய்தி ஒன்றும் உளது. ஏடுகள் வைத்த அறையை மூவர் வந்தாலன்றித் திறத்தல் இயலாது என நின்ற தில்லை அந்தணர்கள் முன்பு, மூவர் தம் திருவுருவச் சிலைகளை அலங்கரித்து எடுத்து வந்து முதல் ராஜராஜ சோழன் கதவம் திறக்க வைத்தான் என்பது செய்தி. இதனால் அவன் திருமுறைகண்ட சோழன் என்னும் புகழுக்கும் உரியனாயினான். இம்மன்னன் விருப்பப்படி இப்பாடல்களைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி. பன்னிரண்டாம் திருமுறை பின்னவர்களால் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டது.

| திருமுறைகள் | | அருளியவர் |
|---|---|---|
| 1, 2, 3 | - | திருஞான சம்பந்தர் |
| 4, 5, 6 | - | திருநாவுக்கரசர் |
| 7 | - | சுந்தரர் |
| 8 | - | மாணிக்கவாசகர் |
| 9 | - | ஒன்பதின்மர் |
| 10 | - | திருமந்திரம் |
| 11 | - | பன்னிருவர் |
| 12 | - | சேக்கிழார் |

சைவத்தால் தமிழும், தமிழால் சைவமும் பெற்ற பெருநிதியம் இது. இச்சைவ இனிமையில் திளைப்போர்க்கு அத்திளைப்பே சிவஞானத்திறவாக மலர்தல் திண்ணம்.

Printed by : Shri. Pravin V. Dabholkar at M/s RNR Printers and Publishers, 8, Thandavarayan Street, Triplicane, Chennai - 600 005.

Published by : Shri. Pravin V. Dabholkar for Vivekananda Kendra Prakashan Trust, 5, Singarachari Street, Triplicane, Chennai - 600 005.

Editor : Shri. P. Parameshwaran, President, Vivekananda Kendra, Vivekanandapuram, Kanyakumari - 629 702.

